



பூமிப்பந்தில் யாழ்ப்பாணம் காரையம்பதி காரைநகரில் பிறந்து
வட்டக்கச்சி, நயினாதீவு, கொழும்பு-15 ஆகிய இடங்களில் வசித்து
அம்பாளின் பதம் சரண்புகுந்த எங்கள் அப்பா

## அமரர் சின்னையா சோமு

அவர்களின் தூய பாதக்கமலங்களுக்கு அர்ச்சிக்கிறோம்

# சோமநாதம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

உ
சிவமயம்

நாகபூஷணி அம்பாள் வீரபத்திரப்பெருமான் துணை



3 1 MAY 2019

யாழ்ப்பாணம் காரைநகரில் பிறந்து
வட்டக்கச்சி நயினாதீவு கொழும்பு - 15 ஆகிய இடங்களில் வசித்து
அம்பாளின் பதம் சரண்புகுந்த எங்கள் தெய்வமான அப்பா

# அமரர் சின்னையா சோமு

அவர்களின் தூய பாதக்கமலங்களுக்கு அர்ச்சிக்கும் அர்ச்சனை

# சோமநாதம்

03 - 11 - 2018

## பூத்தூவுகின்றோம்!

எங்கள் குடும்பத்தின் ஊற்றாய் அம்மாவின் அரும் பெரும் துணையாய் இருந்து எங்களை வாழ்க்கை எனும் பெருநதியில் எவ்வாறு நீந்தி கரைசேர முடியும் என வாழ வழி காட்டிய தெய்வம். தெய்வமான பின்னும் அம்மாவுக்கு பதிலாய் அமுதூட்டிய அன்னை எங்கள் அப்பாக்குட்டியின் திருப்பாதங்களில் இம்மலரினை தூவுகின்றோம்.

நினைவலை மாறாது என்றும் ஆலாகும்
உங்கள் விழுதுகள்! கிளைகள்!

**சோமையா குடும்பத்தினர்**



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

அப்பா எனும் ஆலமரம்

# அமரர் சின்னையா சோமு

| | |
|---|---|
| காரை மண்ணில் | காலன் கண்ணில் |
| 15.03.1947 | 04.10.2018 |

ஆன்மா அழிவில்லாதது! இறைவனைச்சேர மட்டும் தகுதியானவை!




அம்மா பரமேஸ்வரி




அப்பா சோமு

## நெஞ்சின் ஓரத்தில் இருந்து ஒரு முகப்புரை

உலகில் ஓர் உயிராக உடம்பெடுத்து நடமாட வித்திட்ட எங்கள் உதிரம் அம்மா, அப்பா. இந்தப்பாதை நல்லது இதன் வழி பயணித் தால் உங்கள் இலக்கை இலகுவாக அடையலாம். இது கொஞ்சம் கடினமான பாதை சற்றே தவிர்த்து அடுத்த வழியிலும் பயணிக்க லாம். - அன்பு என்றால் என்ன - உலகின் இயக்க சக்கரமான அன்பினை எவ்வாறு உறவுகள் நட்புகளுடன் இணைத்து அந்தப் பாலத்தின் வழியாக அதிஉச்ச மகிழ்ச்சியில் உள்ளார்ந்த சந்தோசத் துடன் பயணிக்கலாம். உறவுகள், நண்பர்களின் - மனிதர்களின் பெறுமதி — யாவரும் மனிதரே - யாதும் உயிரினமே என ஜீவ காருண்யமும் கூட்டி மனிதர்கள் - பசுக்கள் - உயிரினங்கள் என தெய்வாம்ச வாழ்க்கைக்கு வித்திட்ட தெய்வங்கள். ஆலயத்தில் உள்ள தெய்வங்களும் ஆலயங்களும் உங்கள் வீடும் குடும்பமுமே என சதா கோவில்களுக்கு செல்ல வைத்த கடவுளர்களே அம்மா - அப்பா. யார் மனதும் நோகக் கூடாது — எந்த உயிரினமும் வேதனைப்படக்கூடாது — முயற்சியை உங்கள் வசம் வைத்து முன் நோக்கி கல்வியை சரிவர பயன்படுத்தி செல்லுங்கள், வெற்றிப் பாதையில் வெளிச்சம் பிரகாசமாக இருக்கும் என்ற தெளிந்த ஆலோசனை தந்த தெய்வங்கள்.

கடல் கடந்த தேசங்கள் எங்கும் எங்களின் இசை, செயல்கள், சுருதியின்பத்துடன் நாதம் இசைக்கவேண்டும் என்ற உன்னத வழிகாட்டிகளே - சொல்லில் வடிக்கமுடியாத, வர்ணிக்க இயலாத பல நன்மைகளைத் தந்த தெய்வங்கள் - 2010 அக்டோபர் 15 அன்று அம்மா தெய்வமானார். 2018ஆம் ஆண்டு அக்டோபர் 4 அன்று அப்பா அம்மாவுடன் இணைந்தார். தவிப்புகளும் ஏமாற்றங்களும் துக்கங்களும் கருமேகமாக எங்களை சூழ்ந்திருக்கின்ற இந்த வேளையில் ஈடுசெய்யமுடியாத இழப்புகளை தாங்கும் சக்தியையும் தெய்வங்கள் தந்து சென்றுள்ளார்கள். நன்றிகள் அம்மா! நன்றிகள் அப்பா! உங்கள் பாதங்கள் நனைய எங்கள் கண்ணீரின் வரிகள் காலச்சுவட்டை நனைக்கின்றன.

உலகில் சனனித்த ஒவ்வொரு உயிரினத்துக்கும் தேவலோக வரவேற்பு நிச்சயம் இருந்தே ஆகும். அந்தவகையில் சாட்டுகள் (சாக்கு - காரணம் காரிய அடிப்படையில்) மூலம் அவர்கள் அழைத் துச் செல்லப்படுவார்கள். இதுவே உலகநியதி. அக்டோபர் முதலாம் திகதி 2018 ஆண்டு இரவு அப்பா திடீர்நோயால் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறார். இரண்டாம் திகதி தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்து 10ஆம் வார்ட்டுக்கு மாற்றப் படுகிறார். மூன்றாம் திகதி மருத்துவ தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு (MICU) மாற்றி வைத்தியர்கள் கடவுளை வேண்டச் சொல்கிறார்கள். நான்காம் திகதி காலை 9.50 க்கு அப்பா சென்றுவிட்டார் என்ற செய்தி எங்களுக்குத் தெரியப்படுத்தப்படுகின்றது. வைத்தியர்கள் கடும் முயற்சி செய்தும் பலன் காலனுக்குச் சென்றுவிட்டது. அம்மா சென்ற அதே இடம் அப்பாவுக்கும் அதே இடமாக அமைந்தது. இதுவும் மேலே எழுதப்பட்டுள்ளது என எங்களைத் தேற்ற முடியாவிட்டாலும் தேறிய நிலையில் அப்பாவைச் சுமந்து ஆகுதியில் அமைதியாக்கி னோம் அவரின் நேசத்துக்குரிய வட்டக்கச்சியில். வடிக்க வார்த்தை கள் அருகிய அந்த தெய்வத்துக்கு எங்களால் முடிந்த சின்னக் காணிக்கையாக இந்த சிறுமலரை - படிப்போர் - அப்பாவையும் நினைந்து பலன்பெற வேண்டும் என்ற நோக்கில் பதிக்கிறோம்.

நன்றி!

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி



### திருச்சிற்றம்பலம்

எடுக்கும் மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கு அருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ் செவி நீள் முடிக்
கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம்.

### தேவாரம்

ஆடினாய்நறு நெய்யொடு பால்தயிர்
அந்தணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய்மறை யோடுபல் கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடினாயருளாய் சுருங்கஎம தொல்வினையே.

### திருவாசகம்

அத்தேவர் தேவர் அவர்தேவ ரென்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

## திருவிசைப்பா

ஆயிரம் கமலம் ஞாயி(று)ஆ யிரம்முக்
கண்முக கரசர ணத்தோன்
பாயிருங் கங்கை பனிநிலாக் கரந்த
படர்சடை மின்னுபொன் முடியோன்
வேயிருந் தோளி உமைமண வாளன்
விரும்பிய மிழலைசூழ் பொழிலைப்
போயிருந் தேயும் போற்றுவார் கழல்கள்
போற்றுவார் புரந்தரா திகளே.

## திருப்பல்லாண்டு

சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்கும்திசை திசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாம்குழ மாய் நின்று கூத்தாடும்
ஆவிக்(கு) அமுதைஎன் ஆர்வத்
தனத்தினை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்(து) அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

போற்றி நீள் தில்லை வாழ் அந்தணர் திறம் புகலல் உற்றேன்
நீற்றினால் நிறைந்த கோல நிருத்தனுக்கு உரிய தொண்டாம்
போற்றினார் பெருமைக்கு எல்லை ஆயினார் பேணி வாழும்
ஆற்றினார் பெருகும் அன்பால் அடித்தவம் புரிந்து வாழ்வார்

## திருப்புகழ்

தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன ...... தனதான

உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை
உரைத்தி லன்பல மலர்கொடுன் அடியிணை
உறப்ப ணிந்திலன் ஒருதவ மிலனுன ...... தருள்மாறா

உளத்து ளன்பினர் உறைவிடம் அறிகிலன்
விருப்பொ டுன்சிக ரமும்வலம் வருகிலன்
உவப்பொ டுன்புகழ் துதிசெய விழைகிலன் ...... மலைபோலே

கனைத்தெ ழும்பக டதுபிடர் மிசைவரு
கறுத்த வெஞ்சின மறலிதன் உழையினர்
கதித்த டர்ந்தெறி கயிறடு கதைகொடு ...... பொருபோதே

கலக்கு றுஞ்செயல் ஒழிவற அழிவுறு
கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்
கணத்தில் என்பய மறமயில் முதுகினில் ...... வருவாயே

வினைத்த லந்தனில் அலகைகள் குதிகொள
விழுக்கு டைந்துமெய் உகுதசை கழுகுண
விரித்த குஞ்சியர் எனுமவு ணரைஅமர் ...... புரிவேலா

மிகுத்த பண்பயில் குயில்மொழி அழகிய
கொடிச்சி குங்கும முலைமுக டுழுநறை
விரைத்த சந்தன ம்ருகமத புயவரை ...... உடையோனே

தினத்தி னஞ்சதுர் மறைமுநி முறைகொடு
புனற்சொ ரிந்தலர் பொதியவி ணவரொடு
சினத்தை நிந்தனை செயுமுநி வரர்தொழ ...... மகிழ்வோனே

தெனத்தெ னந்தன எனவரி யளிநறை
தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழில்திகழ்
திருப் பரங்கிரி தனிலுறை சரவண ...... பெருமாளே.

**நயினை நாகபூசணி அம்பாள் துதி**

எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என்இனத்தார் வாழ்வொன்றே கருதவில்லை
உனக் கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற
உண்மையை நான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்கும் தீயர் தாமும்
சீலமுறவேண்டுமென்றே வேண்டுகின்றேன்
தனக்கொருவர் ஒப்பில்லாத் தாயே ! இந்தத்
தரணிதனில் சாந்திதனைத் தருவாய் நீயே



## அபிராமி அந்தாதி

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயில்கொள் மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே!

## வாழ்த்து

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்கள் எங்கும் பரவுக அறங்கள் இன்பம்
நல்குக உயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவம் ஓங்கிப்
புல்குக உயிர்கட் கெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.

திருச்சிற்றம்பலம்

# அம்மா அப்பா நாங்கள்..!

உலகமே ஒளிதான்! அதற்கு அர்த்தங்கள் அப்பா அம்மா என்கின்ற சூரியன்கள் இணைந்து ஒளியூட்டுவதால் - அந்த ஒளிக்கதிர்களின் பிரகாசங்களின் பெறுமதியை அறியாமலே அதனுள் திளைக்கிறோம் - அதில் நீந்தி விளையாடுகிறோம் - உலக பௌதீக இன்பங்களில் ஊடுருவுகிறோம் - உன்னதம் பெறுகிறோம் - வாழ்க்கைக்கு அர்த் தம் புரிகிறோம் - உறவுகளின் நட்புகளின் உண்மை அன்பினை அனுபவிக்கிறோம் - பாதுகாப்பினை பெறுகிறோம் - வழிகாட்டுதலை பெற்று நல்வாழ்வு நோக்கி எகிறுகிறோம் - பிறந்ததற்கான பயனை அனுபவிக்கும் பள்ளிக்கூடமாக வாழ்க்கையை அர்த்தபுஷ்டியாக மாற்றுகிறோம் - கல்விவித்தை இணைவித்தையென இன்னோ ரன்ன சாகசங்களை ஏட்டுருவிலும் அனுபவப் பக்கங்களிலும் காண் கிறோம் - நல்லது தீயது - பிரித்தல் இணைத்தலின் வகிபங்குகளின் எடைகளை தடை தகர்த்து மோப்பம் முகர்ந்து முடிவெடுக்கும் ஆற் றல்களை பெற்றுவிடுகிறோம். இவற்றின் ஊற்று எங்கே?, அடிநாதம் எங்கே?.

இந்த கேள்விகளின் விடைகளின் முகவுரையே அந்த நூற்று நாற்பத்தொன்பது புள்ளி ஆறு மில்லியன் கிலோமீட்டர் தொலைவில் உள்ள சூரியபகவானின் ஒளியைஒத்த உலகத்து அம்மா அப்பாக்கள் தாம். அந்த ஒளி - குளிர்நிலவை ஒத்தது - பனிவிழும் தென்றலை ஏந்திய நதியென குளிர்ச்சியின் உறைவிடம் கொண்டது. கடும்பாறை களையும் பெயர்த்தெறிந்து பன்னீரூற்று கொண்டுவரும் அற்புதசக்தி மிக்க மாந்திரீக ஒளி - இந்த பிரபஞ்ச வெளியில் மௌனங்களாலும் மங்கள ஓசைகளாலும் வேதங்களின் பொருள் விளக்கும் வெளிச்ச வீடுகள் - வாழ்க்கைப் பாடம் கற்பிப்பதில் எங்கள் குருக்களின் குருக் கள் - குருவிகளின் ஓசையும் ஆலயமணியும் இசைக்கருவிகளின் ஒலியும் இணைந்து, நரம்புகளின் வழி ஊடுருவி பிரயாணம் செய்து உடம்புகளின் பாகங்களை நனைக்கும் இனிய சங்கீத பாஷைகளின் சமஸ்தானங்கள் - வசன ஓட்டங்களாலும் வாக்கிய

வியாக்கியானங்களாலும் கட்டுக்குள் வடிக்க முடியாத கலைச்சொற்கள் நிரம்பிவழியும் அகராதிக்களஞ்சியங்கள். உணர்வுகள் உணர்ச்சிகளின் உயிர்ப்பு - அன்பு என்னும் உலக இயக்கத்தின் சில்லு அச்சாணி தொடும் விருட்சத்தின் வேர்கள் - எங்களைத் தாங்கிய சஞ்சீவி மலைகளின் தொடர்ச்சி... அம்மாவும் அப்பாவும். ஆனால் இயற்கை விந்தையானது - விவேகமானது - எங்களுக்கு பாடம் கற்பிக்க நினைக்கும்போது சற்றே இவற்றை தூரநகர்த்தி வைக்கும் பௌதீகமாக - ஆனால் வலிமைமிக்க கட்டுண்ட ஆன்மாக்களை எண்ணப்பிணைப்பிலிருந்து விடுவித்து வைப்பதில்லை. இந்த உலகின் நிச்சயமான பிரிதலின் நிலைக்காய் காலன் கவர்ந்து சென்றாலும் காலம் நிலைநிறுத்தும் அம்மாவின் அப்பாவின் நினைவுகளை..!

எங்கள் அப்பா, காரைநகரில் சின்னையா தெய்வானை தம்பதியரின் செல்லமகன் சோமு. இரண்டு ஆண்கள் ஐந்து பெண்கள் என அப்பாவுடன் சேர்த்து ஏழு சகோதரங்கள். அப்பாவின் விதித்தெரிந்த இளவயதிலேயே அப்பப்பாவும் அப்பம்மாவும் சென்றுவிட்டார்கள் தெய்வத்திடம். அந்த இளமை வயதிலேயே குடும்ப பொறுப்புகளை அன்பெனும் பலமிக்க கயிற்றினால் சுமக்கிறார். அந்த சுமப்பின் பெறுமதிகளை அப்பாவின் இரத்த சொந்தங்களின் அதிகூடிய அன்பினாலும் எங்களை தாங்குதலினாலும் இன்றும் அனுபவிக்கிறோம் மகிழ்ச்சியாக. அப்பா சொல்லுவார் - எனக்கு நீங்கள் மட்டும் இல்லை. எல்லோருமே என் பிள்ளைகள் தான். அவர்களையும் நான் அன்பாக பார்க்கவேண்டும் என்று... அதிலிருந்து அப்பா தன் சகோதரங்கள் பிள்ளைகளின் மேல் எவ்வளவு அன்பு வைத்திருந்தார் என்பதை அப்போதே உணர முடிந்தது. அதனை செயலிலும் செய்து காட்டினார் தனது அன்புறவுகளின் துணையோடு.

எந்தக் குறைகள் குறைவுகளும் இன்றி நல்ல கல்வி வாழிடம் தொழில்வசதி என வழிகாட்டி எங்கள் எல்லோரையும் இணைத்து பாசமழை பொழிந்து பாரபட்சமின்றி மிகமிக நன்றாகவே வளர்த்தெடுத்தார். அம்மாவை திருமணம் செய்ய முதல் வியாபாரக்காற்று வீசத்தொடங்கும் காரைநகரில் பிறந்து - கழனிகள் நிறைந்து நல்ல செழிப்பான பசுக்களின் பாலும் பலா, மா, வாழை என முக்கனிகளும் கனிகளும் மேய்ச்சல் கோழிகளின் முட்டைகளும் தானியங்களும் மரக்கறிகளும் நிறை உணவுகள் நிறைய நிறைய தளம்பியோடும் சுத்தமான சுவாசக் காற்று வீசும் சுந்தரக் காடுகளும் சுகமான

பிரதேசமும் - தமிழ் நீரணை இரணைமடு நீர் முதன்முதலில் வருடி செல்லும் வளம்மிக்கமண்ணும் வீரமும்அன்பும் விருந்தோம்பல் பண்பும் விளைநிலமாக கொண்ட வட்டக்கச்சி மண் மிகச்சிறு வயதிலேயே அப்பாவுடன் சகோதரங்களின் பிறப்பு வசிப்பிடமாக பிணைகிறது.

அம்மா யாழ்ப்பாணம் நயினாதீவில் பிறந்து நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் மேற்கு வீதியின் எல்லையில் அமைந்த தனது வீட்டில் வசிக்கிறார். அம்மாவின் அப்பா வீரகத்தி ஐயா அம்மா செல்லாச்சி அம்மையார். அம்மாவுக்கு திருமண வயது. அம்மம்மாவின் தம்பி கிட்டிமாமா என அம்மா அழைக்கும் எங்களின் தாத்தா தலைமையில் அவரின் அண்ணர் வேலாயுதம் (தெய்வமாகிய E.V. டேவிட் ராஜ் - சர்வதேச மூத்த ஊடகவியலாளர் - முன்னாள் வீரகேசரி செய்தி ஆசிரியரும் முன்னாள் தினக்குரல் ஊடக ஆலோசகரும்) எங்கள் தாத்தா இணைந்த குழுவினர் திருமணப்பேச்சை ஆரம்பித்து வெற்றிகரமாக திருமணத்தையும் உறவுகள் நட்புகள் சூழ சிறப்பாக செய்து முடிக்கிறார்கள். மிக சந்தோசமான காலங்களில் அப்பா அம்மாவின் இறை ஆசியால் வேண்டுதலால் எங்களை மக்களாக பெற்றெடுத்து மிக மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறார்கள். (அம்மம்மாவின் கதைகூறலில் கேட்டவை)

தொடர்ச்சியாக எங்கள் அப்பா அம்மாவின் அன்புக்கூட்டுக்குள் நாங்கள் வளரலானோம். நாங்கள் நாலுபேர் மூத்தவன் நான் குணசீலன் இரண்டாவது குணராஜா. மூன்றாவது சசிகலா. நான்காவது கமல்ராஜ். எங்கள் வீடு நயினாதீவு நாகபூஷணி அம்பாளின் மேற்கு எல்லையில் இருந்ததால் அம்மா அப்பாவுக்கும் எங்களுக்கும் காதுகளில் கேட்பவை அம்பாளின் மணி ஓசையும் நாதஸ்வர தவில் பூஜை மந்திரங்களும் இறைபாராயணங்களும் பக்திப்பாடல்களும் சங்கு ஒலிகளுமே. அவை எங்கள் அன்றாட வாழ்வின் ஜீவநாதமாய் எங்கள் நரம்புகளைப் பக்தி மணங்கமழ நனைக்கும். சிறுபையன்களாக இருந்த எங்களை காலையும் மாலையும் தவறாது அம்பாள் கோவிலுக்கு செல்லும் அப்பா பூஜைக்கு முன்னும் நாதஸ்வர தவில் வித்துவான்களின் முன்னும் இருத்தி தானும் வணங்கி இசையிலும் லயித்திருப்பார்.

எங்களின் இசை வாழ்க்கையும் பக்தி மார்க்கமும் அப்பாவால் உருவாக்கப்பட்டது. அம்மா நீர் ஊற்றினார். அம்மா பாடசாலைகளிலும் கோவில்களிலும் பாடல்கள், தேவாரங்கள் பாடுவார். நல்ல

குரல்வளம் இனிமையாக மாரியம்மன் தாலாட்டு பாடுவார் பரமேஸ் வரி என அம்மாவுடன் படித்த அம்பாளின் அறங்காவலர் பவன் மாஸ்டர் என்னிடம் கூறியிருக்கிறார். அம்மாவின் பாடல் ரசிகர் களாக நாங்களும் அப்பாவும் இருந்தோம். அந்தக்கால நல்ல ரசிகர்கள் பலர் என சொல்லக் கேட்டு சந்தோசம் அடைந்தோம்.

அப்பா கோவில்களில் எங்கு எந்த நிகழ்ச்சி நடந்தாலும் இரவென்றா லும் முன்வரிசையில் எங்களைக் கூட்டிக்கொண்டு போய் இருத்தி பார்க்க வைப்பார். நாங்களும் கண் சிவக்க சிவக்க பார்த்து தூங்கி விடுவோம்.

அப்பாவின் பிறந்த ஊர் காரைநகர் என்பதாலும் அவரது குலதெய்வ மும் மூதாதையரின் பராமரிப்புக் கோயிலுமென்பதால் வீரபத்திரர் ஆலயத்தில் பூசை செய்யும் பூசாரியாகவும் இருந்து வந்தமையால் எங்களுக்கும் தெய்வீக ஒளியை பாய்ச்சி இருக்கிறார். அம்மாவின் குலதெய்வமாக ஸ்ரீ நாகபூஷணி அம்பாளை ஒளித்து வைத்த ஸ்ரீ ஆலடி அம்பாள் ஆலயம் இருந்ததாலும் நாகபூஷணி அம்பாளின் மேற்கு வீதி அருகில் வாழ்ந்ததாலும் எங்களை ஆலடி அம்பா ளிற்கு சின்ன வயதில் பூசை செய்வதற்கும் வழிகாட்டி பக்திநெறி நிற்க வைத்தார்கள். அதன் மூலம் இசை ஞானம் பக்திமார்க்கம் என்பவற்றின் வழி செல்ல வழி வகுத்தார்கள் அப்பாவும் அம்மாவும்.

அப்பா இளவயதிலேயே வட்டக்கச்சியில் உள்ள தனது வயல்களில் விவசாயம் செய்து வெற்றி கண்டவர். அப்பாவின் சகோதரர்கள் அவர்களின் கணவர் மனைவியரின் அன்புக்கு பாத்திரமாக இருந்த மையால் பொறுப்பாக பணிகளை முன்னெடுத்து எல்லோரும் இணைந்து விளைச்சல் பெற முன்னின்று உழைத்தவர். அந்த உழைப்பின் பெறுமதிகளை பிற்காலத்தில் எங்களால் உணர முடிந்தது முதலீடுகளாக.

நயினாதீவில் இருந்து பெரும்போகம் சிறுபோகம் என வட்டக்கச் சிக்கு வந்து சிலவேளைகளில் நான்கைந்து மாதங்கள் கூட எங் களை விட்டுவிட்டு தங்கி விடுவார். ஆனால் நல்ல வளத்துடனே திரும்பி வருவார். எங்களுக்கும் வசந்தகாலம் தான். விடுமுறை என்றால் வட்டக்கச்சி தான். பல காலங்கள் அப்பாவுடன் சென்று நாங்களும் வசித்திருந்தோம். சில விடுமுறைகளில் காரைநகர் என வேறு இடங்களுக்கும் சென்று வருவோம்.

யுத்தம் ஆரம்பித்து யாழ்ப்பாணப் பண்ணைப் பாலம் உடைக்கப் பட்டு போக்குவரத்து தடைப்பட்டு யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக் குமான பாதைத்தொடர் A9 தடுக்கப்பட்ட காலங்களில் மூன்று வருடங்கள் அப்பா வட்டக்கச்சியில் தான் நின்று வயல் செய்தார். தன்னுடைய உறவுகளுடன் இருந்தமையால் சந்தோஷமாக இருந் தார். எங்களை ஊரில் தனிக்க விட்டேனே என்ற கவலைக்காக தாம் அனுப்பும் கடிதங்கள் கொழும்பு சுற்றி திருகோணமலை கப்பல் மூலமாக ஒரு மாதத்தின் பின்னர் எங்களுக்கு வந்துசேரும். அப்பாவும் அதே வழியாகவே நயினாதீவுக்கு வந்து சேர்ந்தார் மூன்று வருடங்களின் பின். சொந்தக்காரர்களில் எங்கள் ஐயாவும் அம்மம்மாவும் மாமாக்களும் எங்களை அன்பாகப் பார்த்தார்கள் அந்த மூன்று வருடங்கள்.

கால உருண்டோடல் எல்லோருக்கும் பொதுவான யுத்தஅனர்த்தம் மீண்டும் வட்டக்கச்சி சென்று கமம் செய்யமுடியாத நிலை. வறுமை எங்களை செழுமைப்படுத்த தொடங்கியது. அப்பா பலசரக்கு வியா பாரம் செய்யத் தொடங்கினார். தொடர்ந்து தொலைத்தொடர்பகம் என வியாபாரம் விரிவாகியது. அது உள்வரும் அழைப்புகளுக்கு 10 ரூபா அறவிட்ட காலம். ஊரில் நல்ல வரவேற்பான தொழிலாக இருந் தது. அம்மா அதை அழகாக நெறிப்படுத்தி எங்கள் படிப்பு, உடுப்பு, உணவு என எல்லா செலவுகளையும் ஒழுங்காக நிறைவேற்றி அன்போடு அறிவையும் ஊட்டத்தொடங்கினார்.

எங்கள் நால்வரிலும் அப்பாவும் அம்மாவும் உயிரே வைத்திருந் தார்கள். O/L முடிந்து 1997இல் ஊரைவிட்டு வெளியில் வந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் A/L படிக்க அப்பா கூட்டி வருகிறார். எங்கள் கல்லூரி மதிப்புமிகு அதிபர் அப்பாவுடன் கதைத்து அனுமதி தந்து துணிவூட்டியபோது அப்பா அதிபரை வணங்கினார். அந்த தெய்வம் அதிபர் எனும் தெய்வத்தை வணங்கியதிலிருந்து எங்கள் மேல் எங்கள் கல்வி மேல் அப்பா எவ்வளவு ஆர்வத்துடன் எதிர்பார்ப்புடன் இருந்திருக்கிறார் என்பதை நினைக்கும் போது கண்களில் நீர் பனிக்கின்றது.

ஊரில் (நயினாதீவு) தம்பி ராஜாவும் தங்கச்சி சசியும் கமலும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். A/L முடிய மீண்டும் ஊருக்கு வந்து படிக்கும் காலத்திலேயே தம்பிகளும் தங்கச்சியும் அப்பா அம்மாவுடன் சேர்ந்து ஒவ்வோர் வியாபார முயற்சிகளைச் செய்து குடும்ப முன்னேற்றத்

திற்கு உழைத்தோம். சகோதரர்களின் ஒத்துழைப்பாலும் அப்பா அம்மாவின் வழிகாட்டலினாலும் நல்ல வளமான திருப்திகரமான வாழ்க்கையை சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருந்தோம்.

பின்னர் மெதுவாக கொழும்புக்கு நகர்ந்தோம். ஆனால் நாக பூஷணி அம்பாள் ஆலய மகோற்சவத்திற்கு ஊருக்கு வந்துவிடு வோம். இடைப்பட்ட காலத்தில் ராஜா அப்பாவுடன் சேர்ந்து வியா பாரத்தையும் கொண்டு நடத்தினான். குடும்பத்தையும் சுமந்தான். அம்மாவையும் அப்பாவையும் எங்களையும் பார்த்து வளர்ப்பதில் சசிகலாவே தாயின் தாயாக நின்று வளர்க்கிறாள். அதனால் அப்பா வும் அம்மாவும் அவளைத் தாயாகவே பார்த்தார்கள். அன்புக்கு குறைவில்லா குடும்பம்.

கொழும்பு சென்ற பின்னர் ஊடகவாழ்வும் இசைக்குழுக்கள், வானொலிகள், தொலைக்காட்சிகள் பத்திரிகைகளில் எங்கள் இசை யும் நிகழ்ச்சிகளும் புகைப்படங்களும் வரும்போது அம்மாவின் சந்தோசமும் அப்பாவின் அறிவுரைகளும் ஆலோசனைகளும் எங் களை வழிநடத்திக் கொண்டு இருக்கும்.

கொழும்பு பல்கலைக்கழக, தினக்குரல் - ஏனைய ஊடக வாழ்க்கை யில் கிடைத்த அத்தனை ஊடக அரச தொடர்புகளையும் மனித வளங்களையும் ஒருங்கிணைத்து சர்வதேச இணைய வானொலி ஒன்றையும் ஊடகக் கல்லூரி ஒன்றையும் கொழும்பில் ஆரம்பித் தோம். யாழ்ப்பாணத்துக்கும் விஸ்தரித்தோம். பல மாணவர்கள் பயனடைந்தார்கள். அப்பா உடனடியான முன்னேற்றங்களுக்கும் மாற்றங்களுக்கும் ஆகும் செலவுகளையும் பாராமல் முயற்சிக்கு மட்டும் ஊக்கம் தந்துகொண்டே இருந்தார். பிள்ளைகள் நால்வரும் ஒற்றுமையாக இருப்பதாலேயே திறம்படக் கொண்டு செல்லக்கூடிய தாக உள்ளது என அடிக்கடி சொல்லி சந்தோசப்படுவார். அப்பாவும் அம்மாவும் ஊரில் உள்ள எங்கள் வீட்டினைப் பார்வையிட்டு உறவு களைக் கண்டு நலம் விசாரிக்க எனவும் வருவார்கள். வந்ததும் ஊரில் தங்கி விடுவார்கள். பல நாட்கள் இவ்வாறு அம்மாவும் அப்பாவும் தனித்து ஊரில் நின்றபோது 2010ஆம் ஆண்டு அம்மா வுக்கு நோய்வந்து யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்படுகிறார். ஆறு நாட்கள் ஆஸ்பத்திரியில் இருந்து 2010 அக்டோ பர் 15ஆம் திகதி தெய்வத்திடம் சென்று விட்டார்.

எங்கள் மனங்கள் உடைந்தன. வாழ்க்கையின் தூண்கள் சரியும் போது மனங்கள் தடுமாறத் தொடங்கும். இருந்தும் அப்பாவின் துணை எங்களை சாந்தப்படுத்தி தொழில் நிலைகளில் பத்திரிகை யினையும் வெளியீடு செய்யத்தூண்டியது. ஆலோசகராக அப்பா வழிநடத்திக் கொண்டிருந்தார். ஆனால் துணையிழந்த அவரின் மன ஆறுதலாக நாங்களும் உறவுகளும் இருந்தோமே தவிர அவரின் மனதில் நீண்ட இடைவெளி தன் துணைபற்றி இருந்து கொண்டே இருந்தது.

எனதும் ராஜாவினதும் திருமணத்தை முன்னின்று செய்து அழகு பார்த்த அப்பா - எங்கள் தங்கை சசிகலாவுக்கும் தன் தங்கையின் மகனான கேதீஸ்வரனை திருமணம் செய்து வைத்தார். இப்போது அவர்தான் பொறுப்புகளை சுமக்கிறார். கலைத்துறையில் பட்டம் பெற்றிருந்தாலும் அப்பாவின் வழிகாட்டுதலில் பெரியளவான தொழில் முயற்சிகள் மூலம் கமல் பொறுப்புக்களை ஏற்கவும் பழகிக்கொண் டான்.

அப்பா மருமக்கள்மாரான தாரகா, பவுசிகா, கேதீஸ்வரன் மீதும் அளவில்லாத பாசம் வைத்திருந்தார். தன் மக்களைத் தாயாக தந்தையாக இருந்து பார்ப்பவர்கள் என்பதால் அறிவுரைகளும் அன்பும் உரிமையோடு இருக்கும். தன்னுடைய பேரப்பிள்ளைகள் டர்வின்ஸ்ரீ உடன் ரீவி பார்ப்பதும் டரூண்ராஜ்டன் நடைப்பயிற்சி செய்வதும் அவருக்கு நல்ல சந்தோசம். இரண்டு பேருமே போனில் இணைய புதினங்கள் காட்டுவதும் இன்னும் சந்தோசமாக இருக் கும். அவர்கள் மூன்றுபேரும் குழந்தைகளே.

மகிழ்ச்சிகள் விளையாடியபோது மீண்டும் விதியின் விளையாட்டு ஆரம்பமானது. 2018 அக்டோபர் முதலாம் திகதி கொழும்பு செல் கின்றேன் தனியாக. தனது மருமகளுக்கு உதவியாக வீட்டில் நிற்பதற்காக தம்பியுடன் வருகிறார். இரவு 7.30 மணிக்கு வந்து வழமைபோலவே பேசுகிறார். எனக்கு அறிவுரை சொல்கிறார். பயணத்தில் காசு கொண்டு போகாதே கமலிடம் கொடு அவன் வங்கி யில் போடட்டும் அங்கு போய் எடு என முழுப்பணத்தையும் பக்குவ மாக எண்ணி வாங்குகிறார்.

சுன்னாகத்தில் இருந்து வரும்போது அவரின் பேரன் விடாமல் அழுததாகவும் அப்பா சசியைக் கூப்பிட்டு கையில் பிடித்து வந்து

தம்பியின் பைக்கில் ஏறியதாகவும் தம்பி சொன்னான். அன்று இரவு 1.30 மணியளவில் சுவாசிக்க கஸ்டமாக இருக்கிறது என மரு மகளை எழுப்புகிறார் உடனடியாக தம்பியையும் தங்கச்சியையும் அழைத்து வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கிறார்கள். அன்றிரவு முதல் மாரடைப்பு வந்திருக்கிறது. ICUவிலிருந்து இரண்டாம் திகதி சாதா ரண 10ஆம் வார்ட்டுக்கு மாற்றப்பட்டு சுவாசிக்க சிரமப்பட்டமையால் மீண்டும் ICUவில் சிகிச்சை கொடுக்கப்பட்டு பலன் இல்லாததால் MICUஇல் அனுமதிக்கப்பட்டார். தூக்கம்போலவே படுத்திருந்த அப்பா நான்காம் திகதி காலை 9.50 மணிக்கு பயணமாகி விட்டார் தெய்வத் திடம். மனித வாழ்க்கையின் அத்தியாயங்கள் மழைத்துளி போல மாறுகின்றன. போலி வாழ்வில் சிக்கித் தவிக்கின்றோம் என்ற ஏமாற் றத்துடன் துயர் நெஞ்சை அறைய மௌனமாக அழுகிறோம்.

கமலும் சசியும் சசியின் கணவரும் அப்பாவின் இறுதிக்காலங்க ளில் அப்பாவுடன் இருந்தமையால் அவர்களால் துயரத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கிறது. நாங்கள் இடையிடையே அப்பா வைப் போய்ப் பார்ப்பதும் வருவதுமாக இருப்போம். அப்பா தம்பி ராஜாவைப் பற்றியும் அடிக்கடி விசாரிப்பார். எல்லோருடைய சுக துக்கங்களையும் சசியிடம் கேட்டுக்கொண்டே இருப்பார். ஆக்கபூர்வ மாக எதையாவது செய்யவேண்டும் என்றே முயற்சிப்பார்.

அப்பா தன் வழி அம்மா வழி சொந்தங்கள் எல்லோரிலும் ஒரே மாதிரியான அன்பு வைத்த அதே நேரம் எல்லா சொந்தங்கள் நட்புக்களில் உரிமையோடு தான் அன்பு செய்வார். ஆதனால் எல்லோர் வீடுகளிலும் மனங்களிலும் அப்பா ஒரு அன்பு நிறைந்த பாத்திரமாக விளங்கினார். அப்பாவின் சம்பந்திகளுடன் உரிமை யான அன்பு பாராட்டிய அப்பாவின் உறவாடல் அருமையாகவே இருந்தது. அவர்களே அதை மனதார உணர்ந்தவர்கள். வெளி நாடுகளில் உள்ள அப்பாவின் அம்மாவின் உறவுகள் என அனை வரின் சுகவிசாரிப்புகளில் இறுதிக்காலத்தில் அதிகமாக அக்கறை காட்டினார்.

அதற்குள் அவரின் பயணம் ஒரு இடத்தில் தரித்து நிற்காத கப்பல். கொழும்பில் இருந்துகொண்டு கிளினிக் கொப்பியை நயினாதீவு ஆஸ்பத்திரியில் வைத்திருப்பார். அதனைக் காட்டி நயினாதீவு போக வேண்டும் என சொல்லி பயணத்தை தொடங்குவார். சொந்தங்க ளின் எல்லா வீடுகளுக்கும் சென்று திரும்ப எங்களிடம் வர கிட்டத்

தட்ட ஒரு மாதத்திற்கு மேலே ஆகும். இடைக்கிடை கோவில்களில் விசேடங்கள் கலியாண வீடுகள் வீட்டு நிகழ்வுகள் என இந்த யாத்திரை மனிதரின் யாத்திரையை குறைக்க சசி தான் அதிக அக்கறை எடுப்பாள். பிற்பட்ட காலத்தில்தான் யாழ். பெரிய ஆஸ்பத் திரிக்கு கிளினிக் கொப்பியை மாற்றினார்.

அப்பா எங்களுக்கு ஒரு வழிகாட்டி. என்பதோடு அம்மா இன்றிய நிலையில் அவரின் பயணங்களையோ விருப்பங்களையோ முடிந்த வரை நிறைவேற்றவே நாங்கள் நிற்போம். கமலுக்கு தான் அதிக ளவான பயணங்கள் அப்பாவுடன்.

எங்கு விசேடங்கள் கொண்டாட்டங்கள் என்றாலும் எங்கள் நால்வ ரின் சார்பாக அப்பாவை அனுப்புவோம். அவர் அந்தக் கைங்கரி யத்தை சிறப்பாகச் செய்தமையால் அப்பாவின் உறவுகள் நண்பர் கள் என எவ்வளவு பேர் எங்களில் அன்பு பாராட்டுகிறார்கள். நினைக்க நினைக்க நன்றி தான் அப்பா சொல்லிக் கொண்டிருக்க முடியும். இன்று அந்த பொறுப்புக்களை நாங்கள் எல்லோரும் சேர்ந்து நிறைவேற்ற வைத்துவிட்டீர்கள். எங்களுக்குத் தெரியாது ஏன் எல்லோரையும் அவசரமாக விசாரித்தீர்கள் ஆசைப்பட்டீர்கள் என்று. கண்ணீரை மிச்சமாகத் தந்து அதைத் துடைக்க நெஞ்சுரத்தையும் தந்துவிட்டுச் சென்றீர்கள் அப்பா. அந்த நெஞ்சத்து இரும்பாறையில் வடித்த நினைவுகள் அப்பா.

**உங்கள் சீலன் அப்பா**

**மருமகள் தாரகாவும்**

**நன்றிகளுடன் சோமையா குடும்பம்**

எங்களை உலகுக்கு தந்த உலகம்.

எங்களின் உலகமே

நீங்களும் அப்பாவும் தானம்மா!



அன்னை பரமேஸ்வரி அம்மா!

## அப்பா!

படிக்காத ஒரு புத்தகம்! அனுபவப் பல்கலைக்கழகம்!

அப்பா கம்பீரமாய் ஒரு துணிச்சலின் தூண்!

அப்பா சின்ன வயதில் எங்களை தோளில் சுமந்த புத்தகப்பை!

எங்கள் அப்பா அணையாத தீபம்!

தீபத்தின் காலில் உள்ள வெளிச்சத்தில் நாங்கள் பயணிக்கிறோம் - ஆனால் அந்த தீபம் தொடமுடியாத உயரத்தில் இருந்து உச்ச வெளிச்சம் பாய்ச்சுகிறது எங்களுக்கு!

அப்பா நாங்கள் தவறவிட்ட தெய்வம்!

அப்பா ஒரு பூ மலர்க்காடு! அவரின்றி நாங்கள் தவிக்கிறோம் முட்செடிக்காடுகளாய்!



## அப்பாவின் மொழிகளிலிருந்து...

"ஒரு மாடு ஒரு பக்கம் இழுக்கும்" கிரக மாற்றங்களில் அது சாதாரண மாக நடக்கும் விஷயம். நாம் தான் அணைந்து போக வேண்டும். நடக்க வேண்டிய நேரம் எல்லாம் நடக்கும்.

எங்கள் அப்பா ஒரு யாத்திரை மனிதன். ஓய்வுக்காக நித்திரையே தவிர - தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருப்பார். ஒரு இடத்தில் தரித்து நிற்பது நகரும் பிராணியான மனிதனுக்கு ஏற்றதல்ல என ஒவ்வொரு பிரதேசத்திற்கும் தொடர்ந்து பயணித்துக் கொண்டே இருப்பார்.

## "அமரர் சின்னையா சோமு அவர்கள் இப்புவியில் தன்பணி முடித்து..."

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

சைவமும் தமிழும் செழித்து ஓங்கும் காரைநகரில் பல பெரியோர்கள் தோன்றி நீங்காப் புகழுடன் மறைந்துள்ளார்கள். காரைநகர் ஈன்றெடுத்த தவப்புதல்வன் அமரர் சின்னையா சோமு அவர்கள் மரணமடைந்த துயரமான செய்தியை அறிந்து அதிர்ச்சியடைந்தோம். அவருடைய மறைவு பொதுவாக நயினை மக்களுக்கு ஒரு மாபெரும் பேரிழப்பாகும். திடீரென அவர் பிரிந்த செய்தி பேரதிர்ச்சியாக இருந்தது. முதற்கண் அன்னாரின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்ப அங்கத்தினருக்கும் உறவினர்களுக்கும் கவலை மிகுந்த அனுதாபங்களை கண்ணீர் அஞ்சலியாக இவ்வெழுத்துக்கள் மூலமாக தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னார் பிறந்த மண் காரைநகராக இருந்தாலும் நயினாதீவில் வாழ்ந்து நயினாதீவு முதலாம் வட்டாரத்தில் வாழ்ந்த அமரர்களான வீரகத்தி செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகளான அமரர் பரமேஸ்வரியைத் திருமணம் செய்து சிறப்புடன் வாழ்ந்து வந்தார்.

இவர்களது இல்லறத்தின் பயனாக குணசீலன், குணராஜா, சசிகலா, கமல்ராஜ் என்ற குழந்தைச் செல்வங்களைப் பெற்றார்கள். குழந்தைகள் நால்வரையும் கண்ணினைப் போல காத்து சிறந்த கல்வி அறிவினை ஊட்டி சிறந்தவர்களாக உருவாக்கி அவையத்துள் முந்தியிருக்கச் செய்தார்கள். நல்ல ஒரு மனைவிக்கு கணவனாக வாழ்ந்து இல்லறத்தை நல்லறமாக்கி வாழ்ந்தார் அமரர் சின்னையா சோமு அவர்கள்.

நாகம் பூசித்த நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் அமைந்துள்ள முதலாம் வட்டாரத்தில் குடும்பத்தினருடன் வசித்து வந்த அமரர் அவர்கள் எந்நாளும் அம்பாளை வழிபட்டு அம்பாளின் நல்லருளை

பெற்றுக் கொண்டார். மானிடராய்ப் பிறந்த ஒருவர் என்றோ ஒருநாள் இறப்பது நிச்சயம். நாம் பிறக்கும் போது அந்நாளும் குறிக்கப்பட்டு விடுகின்றது. இப்புவியில் தன்பணி முடித்து இறைவனுக்குத் தொண்டு செய்யச் சென்றுவிட்டார் என அவர்தம் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து என் ஆழ்ந்த அனுதாபங்களையும் கூறி அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நயினை நாகபூசணி அம்பாளை பிரார்த்திக்கின்றேன். சாந்தி! சாந்தி! சாந்தி!

நயினை மக்கள் சார்பில்,

**நயினை நா.க.குமாரசூரியர் J.P.**

வாழ்நாள் சாதனையாளர், சமாதான நீதிவான்,

ஓய்வுநிலை அஞ்சலதிபர், நயினாதீவு - 02.

---

## ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறேன்!

கொழும்பு பல்கலைக்கழக ஊடக கற்கை சகமாணவனும் நண்பனுமான கமலின் அன்புத்தந்தை சின்னையா சோமு அவர்களின் மறைவுச்செய்தியைக்கேட்டு மிகுந்த அதிர்ச்சியடைந்தேன்.மரணம் வழமையானதெனினும் சில இழப்புகள் குடும்பத்தினால் தாங்க முடியாதவை.

அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அக்குடும்பத்தினருடன் நான் துயர் பகிர்வதில் இணைந்திருப்பேன்.

**ஹேமசந்திரபதிரன (ஊடகவியலாளர்)**

மொழிபெயர்ப்பாளர், தலைமையகம்,

இலங்கை வங்கி, கொழும்பு - 1

# உள்ளத்தால் உயர்ந்த மனிதர்...!

மனிதனுடைய வாழ்க்கைப் பயணம் எம்மத்தியில் பல புரிதல்களையும், பல அர்த்தங்களையும் எம்மிடம் தந்துவிட்டுச் செல்கிறது. 1997 ஆம் ஆண்டு யாழ். மத்திய கல்லூரியில் குணசீலன் தன்னை மாணவனாக இணைத் துக் கொண்டபோது அனைத்து சக மாணவர்களின் நட்பில் நெருக்கமா னான்.

இவ்வாறு அவனது வசிப்பிடமான நயினாதீவிற்கு சுற்றுலாவாக சென்று வர ஆயத்தமாகி அவனது வீட்டிற்கு சென்ற எமக்கு ஆச்சரியம் காத்திருந்தது. முற்றிலும் மாறுபட்ட சூழல் கிராமிய வாழ்க்கை முறையின் உபசரிப்பின் உச்சம், உணவுச்சுவையின் சிறப்பு, பெற்றோரின் அன்பான உபசரிப்பு என்பவற்றில் அனைவருமே அவனது குடும்பத்தினை புரிந்து கொண்டு விட்டோம். எளிமையான வாழ்க்கையில் எவ்வளவு சிறப்பான குடும்பம், அனைவருமே எமக் குள் முணுமுணுத்துக் கொண்டோம்.

தங்கியிருந்த மூன்று நாட்களில் சோமையா... சோமையா... என்று கூப்பிட்டு கொண்டு வரும் அவர்களது உறவினர்கள், சுற்றத்தவர்கள் மற்றும் எங்களுடன் பழகியமுறை அனைத்துமே எமக்கு ஒரு வாழ்க்கைப் பாடத்தினைக் கற்றுத்தந்தது. அதிகம் பேசாத அவரது குணம் ஆனாலும் எமது தேவைகள் அனைத்தையும் தனது மகனின் தேவை போன்று செய்துவிடும் அவரது எளிமையான குணம். அதனைத் தொடர்ந்து ஒவ் வொரு வருடமும் நயினாதீவு கோவிலுக்கு சென்றுவர ஆரம்பித்தோம்.

சென்ற ஒவ்வொருமுறையும் சோமையா என்கின்ற அப்பாவின் உபசரிப்பும் இவரது நடத்தையும் எம்மத்தியில் எம் கண்முன் இன்னும் நிழலாடுகின் றது. ஒரு தந்தையாக அவர் நிறைய விடயங்களை எமக்கு கற்றுத் தந்தி ருக்கிறார். அவரது மௌனமான நடத்தையில் எத்தனையோ அர்த்தங் கள் அதனை பழகியவர்களுக்குத்தான் புரிந்து கொள்ள முடியும்.

அவரது இறுதிக்காலம் வரை நாங்கள் தொடர்பில் இருந்தோம். எமது நண்பனுடன் அனைத்து பிள்ளைகளின் வளர்ச்சியில் அவரது செல்வாக்கு சொல்லத் தேவையில்லை. உள்ளத்தால் உயர்ந்த மனிதர் நிறைவான குணவியல்பு கொண்டவர். எம் மத்தியில் இல்லை என்றாலும் எம் மனங் களில் வாழ்ந்து கொண்டிருப்பார்.

**A/L 99 வர்த்தகப்பிரிவு மாணவர்கள்**
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## கடமையை நேர்த்தியாக நிறைவேற்றிய தந்தை!

எனது அன்புக்குரிய ஆசிரியர் குணசீலன் அவர்களின் தந்தையார் சின்னையா சோமு அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மனம் வருந்தினேன். தந்தையை பிரிந்து துயருற்றிருக்கும் என் ஆசிரியருக்கும் அவர் சகோதரர்களான குணராஜா அண்ணா, சசிகலா அக்கா, கமல் அண்ணா ஆகியோருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கிறேன். அமரராகிவிட்ட ஐயா சின்னையா சோமு அவர்கள் இந்த மண்ணில் எவ்வண்ணம் சிறப்புற வாழ்ந்தார் என்பதற்கு எடுத்துக்காட்டாய் அவரது பிள்ளைகள் விளங்குகின்றனர்.

ஊடக துறையில் ஒரு துரோணர் போன்று இருந்து இன்றளவும் என்னை வழிநடத்துபவர் எனது ஆசிரியர் குணசீலன் அவர்கள். அது மட்டுமல்ல பல ஊடகவியலாளர்களை உருவாக்கிய பெருமையும் இவருக்குண்டு. இவர்களின் அத்தனை பெருமையும் தந்தையையே சாரும் என்பது எனது எண்ணமும் திண்ணமுமாக இருக்கிறது.

"மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி - இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல்."

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்."

என்ற குறளுக்கேற்ப ஐயா சோமு அவர்கள் சிறந்த தவம் இயற்றியிருக்க வேண்டும் இத்தகைய நன்மக்களைப்பெற என்பதோடு தன் மக்களையும் அவ்வாறிருக்க செய்தமை தந்தையின் கடமையை நேர்த்தியாக நிறைவேற்றியுள்ளார். பிள்ளைகள் பெருமைப்பட வேண்டிய தந்தை. வேர் இன்றிய மரம்போல் தந்தையை பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதலை கூறுவதோடு ஐயா சோமு அவர்களின் ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்திக்கிறேன்.

**மகாதேவன் தர்ஷன்**
இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் யாழ் FM

## ஊடகத்தில் உணர்வோடு பயணித்த தந்தை

குணா ஆசிரியரின் தந்தை திடீர் மறைவு குடும்பத்தினரிற்கு பெரும் இழப்பாக அமைந்திருக்கும். தந்தையின் ஆத்ம சாந்திக்காக குடும் பத்தினரோடு நானும் பிரார்த்திக்கின்றேன்.

ஒன்றரை ஆண்டுகள் தந்தையோடு நேரடியாக பழகும் சந்தர்ப்பம் வாரணம் fm ஊடாக, ஊடகக்கற்கை கற்றபோது கிடைத்தது. அந்த காலம் பல இடையூறுகள், கஸ்டங்கள், குணா ஆசிரியரின் தாயின் இழப்பு என சந்தித்தாலும் குடும்பம் மீண்டு வருவதற்கு ஒரு நல்ல தந்தையாக குடும்பத்தை தாங்கியவர் குணா ஆசிரியரின் தந்தை.

வாரணம் fm குறிப்பிட்ட காலத்தில் நாடு முழுவதும் குறிப்பிட்டு சொல்லும் ஓர் ஊடகமாக வளர தந்தையின் பங்கு மிக முக்கியம். குணா ஆசிரியர் அவரின் சகோதரர்கள், சகோதரி என அனைவரும் வாரணம்fm ஊடகத்திற்காக உழைத்தபோது தானும் அவர்களோடு அதே உணர்வோடு எங்களோடு ஊடகத்தில் பயணித்தவர் தந்தை.

மாணவர்களின் பயிற்சி காலத்தில் கொழும்பு சென்று அங்கு சில ஊடகங்களில் நேரடி பயிற்சி பெறும் சந்தர்ப்பத்தில் 30 பேருக்கு மேல் குணா ஆசிரியரின் வீட்டில் தங்குவோம். அத்தனை பேரையும் 2 நாட்கள் தங்கள் வீட்டு பிள்ளைகளாக கவனித்து எந்த குறையும் இல்லாமல் கவனித்த ஓர் தந்தை. என் குடும்பத்தில் இன்று தந்தை யின் இழப்பு ஏற்பட்டது போல் உணர்வை தந்துள்ளது.

இன்றும் புலம்பெயர் நாட்டில் ஓர் உறுதியான ஊடகத்தில் நான் பயணிக்கும் திறனை தந்தது வாரணம்fm ஊடகம். என் வாழ்வில் என்றும் நெருக்கமான ஓர் அங்கம். தந்தையின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் நானும் குடும்ப அங்கத்தவனாக இவ்வாறு இணையும் சந்தர்ப்பம் கிடைத்தமை இறைவனின் ஆசி.

வணக்கம்.

**டினூஷன் (RJ.Dinu)**
**IBC தமிழ், லண்டன்**

## அன்புள்ள அப்பாவுக்கோர்
# அன்புக் கவிதை

வட்டக்கச்சியில் வசித்த மொட்டே
வாழ்நாளெல்லாம் எமக்காய் உழைத்து
வன்னிமண்ணே தஞ்சமென்று இருந்து
வண்ண மகள், மகன்மாரின் பெருஞ்செல்வம் அப்பாவே!

பஞ்ச புராணங்களை பரவசத்துடன் பாடும்
பரமேஸ்வரி அம்மாவை கைப்பிடித்து
பகல் இரவு என்று பாராக்காமல் உழைத்து
பக்தியுடன் வாழ்ந்த மாமனிதர் அப்பா!

வரும் ஆட்களின் பசியைப் போக்கி
வயல் நிலத்திலே பொழுதை போக்கி
வம்புக்கு வருபவர்களை புன்சிரிப்போடு வரவேற்று
வாஞ்சையோடு அனுப்பி வைக்கும் அப்பாவே!

வைத்தியமே வேண்டாமென்று சொன்ன அப்பாவே
வந்த காலனோ தூக்கிக் கொண்டு சென்று விட்டானே
வருக மீண்டும் பிறந்து இப்புவியில்
வாழுகிறோம் உங்களுக்காக அப்பாவே!

அக்கம் பக்கத்திலே இருந்தவர்களிடம்
சொல்லி விட்டு வந்தோம் அப்பா
உங்களைப் பார்ப்பதற்கு - சிறிதுமே எங்களை
கண் திறந்து பார்க்கவில்லையே அப்பா!

முகநூலில் வந்த செய்திகளை வண்ணமயமாய்
முழு மனதோடு அப்பப்பாவுக்கு காட்டுவதற்காக
முற்றத்து விறாந்தையில் காத்திருக்கிறான்
உங்கள் முதல் பேரன் அப்பா!

பிரியமானவள் சீரியலை பிரியமுடன் பார்க்கும் அப்பாவே
பிரிந்து விட்டோமே உங்களை
பித்துப் பிடித்ததுபோல் ஆகிவிட்டோமே
என்னைப் பெற்றெடுத்த அன்னையும் இல்லையே அப்பா!

சிக்கனத்தில் சிறந்த அப்பாவே
சீக்கிரத்தில் எமை விட்டு போய் விட்டீர்கள்
நீங்கள் செல்லமாக பவுஸ் என்று அழைக்கும்
பாச மருமகள் காத்திருக்கிறாள் சேவை செய்ய!

வஞ்சக எண்ணமில்லா வடிவான அப்பாவே
நகைப்புடனே எப்பொழுதுமே இருப்பீர்களே
வந்ததோ காலன் உங்களை கொண்டு செல்ல!

நல்ல நிலையில் இருந்த நீங்கள்
எங்கள் எல்லோரையும் விட்டுச்
செல்ல மனம் வந்ததோ அப்பா
உங்கள் பிரிவைத் தாங்கிக்கொள்ள முடியாத...

**அன்பு மகன் - குணராஜா**
**அன்பு மருமகள் - பவுசியா**
**பேரன் - டர்வின்ஸ்ரீ**



## அன்புள்ள அப்பாவே!

உங்கள் மகளைவிட்டு
எங்கே சென்றீர்கள் அப்பா…

அன்புள்ள அப்பாவே!
சசி என்று மனம் நிறைய அழைத்தீர்கள்!
வா சசி என்று வாய் நிறைய அழைப்பீர்கள்!
அவை இன்னமும் என் காதில் சங்கீதமாய்
கேட்கிறதே அப்பா.

"வலிக்க அடித்து விட்டு
கட்டி அணைப்பார் - அம்மா
மெல்ல அடித்துவிட்டு
தனிமையிலிருந்து அழுவார் அப்பா"
நீங்கள் எமக்கு மெல்லக்கூட
அடிக்கவில்லையே அப்பா!

எங்கு பார்த்தாலும் உங்கள்
காட்சி தான் தெரியுதப்பா!
இறுதி நிமிடங்களில் உங்கள் ஏக்கமும்
நாங்கள் தவித்த தவிப்பும்
யாருக்கு புரியும் அப்பா!

நல்ல தந்தைக்கு இலக்கணமே
உயர்வுகளும் பெருமைகளும் தான்
இவை எல்லாம் உங்களை நாடி வந்தபோதும்…
ஒரு புன்னகையால் ஒரு குழந்தைபோல்
எமை அரவணைத்த செல்வமே!
உங்களைப்பற்றிச் சொல்ல எனக்கு
வார்த்தைகளே போதாதப்பா!
வெம்பி அழுதாலும் வேதனையால் துடித்தாலும்
ஏழேழு ஜென்மங்கள் எடுத்தாலும் - உங்கள்
மகளாய் பிறந்து மடிமீது தவழ்வேன் அப்பா.
கருவண்டு வழிசிவந்து இமைகள்
கடுகடுக்க காத்திருக்கும்
பாசமுள்ள உங்கள் ஒரே மகள்

கேதீஸ்வரன் சசிகலா
பேரன்
டரூண்ராஜுடன்

# இரண்டாவது பொக்கிசமே!

எம் வாழ்க்கையில் இழந்த
இரண்டாவது பொக்கிசமே!
எம்மை இந்த உலகிற்கு
ஈந்தளித்த தெய்வமே!
உங்கள் துணையின்றியும் நீங்கள்
தனியாக எம்மைவிட்டுச் சென்று விட்டீர்களே!

காற்று வீச மறுக்கிறதே - காலம்
விடிய மறுக்கிறதே - உறவுகள்
எத்தனை இருந்தென்ன ஆலமரம்போல்
இருந்த நீங்கள் சாய்ந்ததால்
சோகங்கள் கசிந்தபடி - எம்மனம்
மௌன வெளியில் கலையாமல்
தவிக்கிறதே!

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

உங்கள் பிள்ளைகள் நாம் பரிதவிக்க
எங்கு சென்றீர்கள் அப்பா!
நினைக்கும் நெஞ்சில் நீங்காமல்
உங்கள் நினைவுகளே ஓடுகின்றன...

இறுதி மூச்சை எமன் தனக்கு
இரையாக்கும் போது - என்னை
நினைத்தீர்களாப்பா...
கண்ணீர்த் துளிகள் கூட எனக்கு ஆறுதல்
சொல்வதில்லை - உங்கள்
அன்பு வார்த்தைகளை நெஞ்சம் தேடுதப்பா
வார்த்தைகளே இல்லாத வடிவம்
அளவுகோலே இல்லாத அன்பு
சுயநலமே இல்லாத இதயம்
வெறுப்பைக் காட்டாத முகம்

நான் மடி மீது தலை வைத்து நிம்மதியாய்
தூங்க மறுவாழ்வு வாழ வாங்கப்பா
வேதனையுடன் வழிநீர் சுமந்தபடி
உங்களுக்காய் காத்திருப்பேன்.

என்றென்றும்
உங்கள்
அன்பு மகன்
சோமு
கமல்ராஜ்

# பேர்த்தியின் பரிதவிப்பு

தாத்தா என அழைத்த - என்
உதடுகள் இப்போது ஊமையாகி விட்டன.
இத்தனை பேரிருக்க இறுதியில் ஒரு வார்த்தை
சொல்லாமல் சென்றதன் காரணம் என்னவோ...

ஆயிரம் ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உங்கள் அன்புக்கு எவர் ஈடாக முடியும்...
நிரப்பமுடியாத வெற்றிடத்தை
உருவாக்கி விட்டீர்களே...
குன்றாத குடும்ப விளக்கே
பந்தபாசம் மறந்து பாதி வாழ்விலே
பட்டமரமாய் விட்டதென்ன?

தாத்தா என்ன விலை கொடுத்து உங்களை
எமன் வாங்கினானோ?
நிம்மதி அகராதியை வேதனை கறையான்
வேண்டுமென்றே நின்று தீர்த்ததுவோ...?
உள்ளத்தில் இருந்து பிரவாகிக்கும் - என்
உணர்வுகளை எதனைப் பூசிமெழுகி தடுப்புப் போடுவது...
இமைகளை இறுக்கி மூடினாலும்
உடைத்துக் கொண்டு வருகிறது கண்ணீர் துளிகள்...

நீங்கள் வாழ்ந்த காலத்தை
மீட்டிப் பாரக்க முடியவில்லையே
உங்கள் பிரிவு உயிரை துருவுகிறதே தாத்தா

தாத்தா...
இச் சொல்லுக்கு இப்போது மூச்சிலையே தாத்தா
அன்பிற்கினிய உறவே!
அன்பு, பணிவு, கனிவு அனைத்தையும்
கற்றுத்தந்த என் அருமை தாத்தாவே!
ஒழுக்கமதை கடைப்பிடித்தே - உன்னதமாய்
வாழ்ந்திடுவேன் - இப்புவிதனிலே
நீங்கள் சொல்லிய அறிவுரைகள் அனைத்தையும்

நேர்மையாக கடைப்பிடித்து - வேதனையுடன்
விழி நீர் சுமந்தபடி உங்களுக்காய்
காத்திருப்பேன்.

என்றென்றும் அன்புடன்
**மெ. தூயவாணி**

## பேர்த்தியின் புலம்பல்

மென்மையும் மிருதுவான கோபம் அற்ற
சாந்தமுடன் ஈரம் கனிந்த இதயமுடைய
இனிய சொல்லால் பாசம் தந்த நேசமிகு
பண்பான சோமு தாத்தாவே!

உங்களது புன்சிரிப்பும் நயனக் கதையும்
கேட்டாலே இதயத்து சோகமெல்லாம்
எங்கோ சென்று விடும்

நீங்கள் சுற்றிய இடமெல்லாம் - நீங்கள் இன்றி
வெறுமையாய் போனதேனோ
எங்கள் அனைவரையும் அவசரமாய்
விட்டுச் சென்றதுதான் ஏனோ!

**கோ. கலைமதி**

## அப்பாவிடம் நாங்கள் படித்த பாடங்களில் சில..

1. அதிகாலை நித்திரை விட்டெழுதல் (Early walk man) எவ்வளவு களைப்பாக இருந்தாலும் அதிகாலை 4 மணிக்கே எழுந்து விடுவார்.

2. புன்னகைக்கு சொந்தக்காரர். அப்பாவின் புன்னகையின் அர்த்தத்தை எளிதாக அறிந்துகொள்ளாத வகையில் எதற்குமே நல்ல புன்சிரிப்பு சொரிவார் மகிழ்ச்சியாக. (Non easily study & handle man) என்ன பிரச்சினையாக இருந்தாலும் புன்னகைக்குள்ளே பதில் இருக்கும்.

3. பிரச்சினைகளை இலகுவாக எதிர்கொள்ளும் திறன் (Handling the Problems Easily)

4. கவலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டார். எந்நேரமும் சந்தோசமாக இருப்பார். (Always Happy)

5. நகைச்சுவை பாங்கு. (Succeed in light entertainment way)

# மறுவாழ்வில் நற்பிறவி வாழ்வார்



கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடக கற்கை நெறியை ஒன்றாக பயின்ற எமது சக மாணவன் அன்பு நண்பன் கமலுடைய பாசத்திற்குரிய அப்பா சின்னையா சோமு அவர்களது திடீர் இறப்பின் செய்தியை அறிந்து நாங்கள் கவலை அடைந்ததோடு அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

எப்பவுமே புன்சிரிப்பும் அளவான பேச்சும் நற்குணம் கொண்ட அந்த ஜீவனுடைய உயிரானது பகவத் கீதையில் கூறப்பட்டது போலே உடல்தான் இறக்கப்படுகிறதே தவிர உயிர் இறக்கப்படுவதில்லை அந்த வகையில் இவரது உயிரும் கடவுளிடத்தில் சென்று மறுவாழ்வில் நற்பிறவி வாழ்வார் என்பது உண்மை. ஒருவர் பிறக்கும் போதோ வாழும் போதோ அவர் புகழ் தெரிவதை விட நல்ல குணமுடைய ஒருவர் இறக்கும் போது தான் அவர் பெருமை பேசப்படுகின்றது. அவ்வாறு பார்க்கும் போது அவரது உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் அவர் செய்த உதவிகளும் அவர்காட்டிய அன்பும் அவரது இறுதிக்கிரியையின் போது நாங்கள் பார்த்தோம். ஒவ்வொருவரும் அவருக்காக அழுத கண்ணீர்த் துளிகள் மழைத்துளிகளாக அவரது உடலையும் நனைத்தது. அவரது நல்ல ஆத்மா சிறந்த முறையில் சாந்தியடையும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுபம்!

**"ஊடக கற்கை மாணவர்கள் 2013"**
**கொழும்பு பல்கலைக்கழகம்.**

கமலுடைய அன்புத் தந்தை

## சின்னையா சோமு அவர்களின் திடீர் மறைவையொட்டி...

அன்பே வடிவாய் அறிவே உருவாய்
அன்புத் தந்தையாய் பாசமிகு துணைவனாய்
இனிய ஆசானாய், நல்வழி காட்டியாய்
மண்ணில் வாழ்ந்த காலம்
பொற்காலமாய் சிந்தை மகிழ்ந்திடும்

காரையம்பதி மண்ணில்
உயர் குடும்பத்தில் பிறந்து
நன் முத்துக்கள் போன்று மிளிரும்
நான்கு முத்துக்களை உலகுக்காய் அளித்து

கல்வியில் சிறந்தும் குணத்தில் உயர்ந்தும்
மக்கள் போற்றி வாழும் வகையில்
இனிய குலக்கொழுந்துகளை
உருவாக்கி உயரவைத்த தெய்வம்.

அகவை 71 இல் மட்டுமே கடந்த
உங்கள் இன்னுயிரை இன்னும்
சொற்பகாலம் இப்புவியில்
விட்டு வைத்திடக் கூடாதோ..

பிரிவுத்துயரில் பெற்ற குலக்கொழுந்துகள்
துடித்தபடி உள்ளத்தையும்
அன்புடன் கதைகள் சொல்லி
அரவணைத்து உணவூட்டி வளர்த்த
இனிய பேரக்குழந்தைகள் இன்முகம்
காணாது துயருற்று வாடுவதை
எண்ணி மனம் கலங்குகிறதய்யா.

**தயாழினி**
**அறிவிப்பாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**
**(கொழும்பு பல்கலைக்கழக ஊடகக்கற்கை சகமாணவி)**

# தலைமாட்டில் குத்து விளக்குகள்...

அந்தக் குத்துவிளக்குகள் தலைமாட்டில் எரிந்து கொண்டிருக்கின்றன. அவை எரிந்தாலென்ன..., அணைந்தாலென்ன..., அந்தப் படுக்கையில் கிடக்கும் மனித விளக்கு அணைந்து விட்டதே!

அது எரிந்து கொண்டிருந்தவரை குத்து விளக்குகளுக்கு எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தது. ஆனால் அந்த விளக்குக்கு ஊற்றும் எண் ணெயை இறைவன் ஊற்றாமல் விட்டுவிட்டான்.

மானுடத்தின் சாகசம் மரணப்படுக்கையோடு நின்றுவிட்டது. மனிதன் செய்த விளக்கைப்போல், எரியவிட்டால் பத்திரப்படுத்தக்கூடிய நிலை யில் அந்த உடம்பு இல்லை. நான்கு நாட்களானால் அது நாறிப் போகும். நறு நெய் பூசி வைத்தாலும், அதிலிருந்து பூச்சி புழுக்கள் உற்பத்தியாவதைத் தடுக்க முடியாது.

அந்த மனிதன் அந்தகாரத்தில் கிடக்கிறான். ஆனாலும் அவன் தலை மாட்டில் இரண்டு விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. அழுவாரை யும் சிரிப்பாரையும் அறிய முடியாத சடலத்திற்கு அந்த விளக்குகள் எவ் வகையில் உதவப் போகின்றன? அந்த விளக்கு ஏற்றுதலும் அணைத்த லும் உங்கள் கைகளே! உங்கள் விளக்கை ஏற்றுவதும் அணைப்பதும் எவருடைய கைகள்?


மெய்ஞ்ஞானிகளும் விஞ்ஞானிகளும் இங்கே தான் யோகிக்கின்றார்கள். எல்லோருடைய விளக்குகளும் அணைய வேண்டியதே. அவை எரிந்த காலத்தில் எத்தனை பேருக்கு ஒளிகாட்டின என்பதே முக்கியம். சத்தியம் என்ற தாம்பாளத்தில் உங்கள் விளக்கை ஏற்றிவையுங்கள். குருடர் அல் லாதவர்களுக்கு அவை வழிகாட்டிடும்.

ஒரு கோவணத்தை கூட நீங்கள் கொண்டு வந்ததில்லை. நிலையா மையே நிலையானது என்பதை அவனது மரணப்படுக்கை காட்டுகிறது. அந்தச் சடலத்தை நீங்கள் நன்றாகப் பார்த்துக் கொள்ளவே அந்தக் குத்துவிளக்குகள் எரிகின்றன.

பிறந்த விளக்கு அணைந்து கிடப்பதைச் செய்யப்பட்ட விளக்குகள் காட்டிக் கொடுக்கின்றன. மரணத்தில் அடங்கியுள்ள தத்துவத்தை அவை பறை சாற்றுகின்றன. எதையும் மறுக்கும் நாத்திகனே, மரணத்தையும் மறுத் துப்பாரேன், பார்க்கலாம்.

**கமலின் நண்பன் மருதை சத்தியசீலன்**
**(பேராதனைப் பல்கலைக்கழக சகமாணவன்)**
**கதிரேஷன் கல்லூரி, நாவலப்பிட்டி.**

# வெற்றி உனக்குள்ளே!



தனிமனிதர்கள் அடைந்த வெற்றிக் குப் பின்னால் இந்த 5 சங்கதிகளே காரணமாக இருக்கின்றன.

1.சாதிக்க வேண்டும் என்கிற வெறி.
2.வரையறுக்கப்பட்ட இலக்கு.
3.விளைவுகளுக்கு பொறுப்பேற்றுக் கொள்ளுதல்.
4.சரியான கண்ணோட்டம்.
5.தன் மீதான முழு நம்பிக்கை.

**1.சாதிக்க வேண்டும் என்கிற வெறி:**
நாம் எதைப் பெற வேண்டும் எதில் ஜெயிக்க வேண்டும் என்று குறி யாக இருக்கிறோமோ அதில் ஓர் ஆழமான பற்றுக்கொள்ள வேண் டும். உண்மையான ஈடுபாடு இருக்க வேண்டும். மின்சார பல்பை கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசன், பலநூறு முறை தன்னுடைய சோதனை சாவடியில் பின்னடைவு ஏற்பட்டபோதும் அவரது 'வெற்றி கண்டே தீர வேண்டும என்கிற வெறித்தனமான ஆர்வம்தான் இறுதியில் ஜெயித்தது.

**2.வரையறுக்கப்பட்ட இலக்கு:**
தீர்க்கதரிசனமான குறிக்கோளை (clearly defined goal) மட்டுமே இலக்காக கொள்ள வேண்டும். 'குறிக்கோள்' அனைத்தும் நம் கட்டுப்பாடு, சம்பந்தப்பட்ட முயற்சி, திறமை, ஆர்வம், ஈடுபாடு, ஞானம், உழைப்பு மற்றும் நம்மால் எம்பக் கூடிய உயரத்திற்குள் (சாத்தியப்படுவதாக) நிர்ணயிக்கப்பட வேண்டும்.

**3.விளைவுகளுக்கு பொறுப்பேற்றுக் கொள்ளுதல்:**
நமக்கு ஏற்படும் தோல்விகளுக்கு பெரும்பாலும் பிறரைத்தான் குறை சொல்கிறோம். இது தவறில்லை என்று சிலருக்கு தோன்றும். அவர் கள் தயவு செய்து ஒன்று செய்யுங்களேன். ஹோனஸ்டாக இன்றோ, நேற்றோ ஏற்பட்ட ஒரு சின்ன தோல்விக்கு காரணம் எதுவாக இருக் கும் என்று சுயமதிப்பீடு செய்து பார்த்து விடுங்களேன். சம்பவத்தின் முடிவு தோல்வி என்பதால்,அதை வெற்றி கொண்டிருக்க நாம் என்னவெல்லாம் செய்திருக்கலாம் என்று. மாற்று வழி புலப்படும். இந்த பரிசீலனை உங்களுக்கு அடுத்தமுறை உதவும்.

### 4. சரியான கண்ணோட்டம்:

நாம் திட்டமிட்டு சாதிக்க வேண்டிய ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒரு பயணத்திற்கு சமமானது. அந்த பயணத்தை தொடங்கும் போதும், பயணத்தின் போதும் சில வேளைகளில் எதிர்பாராத பிரச்சினை களை சந்திக்க வேண்டி வரலாம். எனவே அத்தகைய பிரச்சினை களை எதிர்கொள்ளும் மனோதிடம் நமக்கு இருக்க வேண்டும். இப்படிப் பல சோதனைகளைத் தாண்டியவர்கள்தான் வாழ்க்கை யில் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

ஒவ்வொரு பிரச்சினையும் நமது முன்னேற்றத்திற்கான வாய்ப்பு என்றும், ஒவ்வொரு வாய்ப்பும் ஒரு பிரச்சினையை உள்ளடக்கியதே என்றும் புரிந்துகொள்ள வேண்டும். அதே போல பிரச்சினைகளின் பின் விளைவுகளை கண்டு பயப்பட்டால் ஓரடி கூட முன்னேற முடி யாது. மனித சமுதாயத்தின் ஒவ்வொரு அடி வளர்ச்சிக்கும் இரண்டு அடியாவது பின்னடைவு இருந்திருக்கும் என்பதை உணருங்கள்.

### 5. தன் மீதான முழு நம்பிக்கை:

வெற்றி பெற வேண்டும் என்கிற எண்ணத்துடன் முன் வைக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் அசைக்க முடியாத நம்பிக்கையை அடித் தளமாக கொள்ளுங்கள். 'நம்மால் முடியும்' என்று தினசரி இரண்டு முறையாவது உங்களது குறிக்கோளை மனதில் கொண்டு வந்து மனதிற்குக் கட்டளை இடுங்கள். இது ஒன்றும் எனக்கு பெரிய விஷயமில்லை நான் நினைத்தது நடக்கப் போகிறது என்னை சுற்றி உள்ளவர்கள் எனது வெற்றிக்கு துணைபுரிகிறார்கள், எனது வெற்றிகளை பாராட்டுகிறார்கள்' என்று திரும்பத்திரும்ப மனக்கண் முன்பாக உங்களது இலக்கை நிறுத்தி வைத்து கற்பனை செய்யுங் கள். கடுமையினால் சாதிக்க முடியாததை அன்பு சாதித்துவிடும்.

எவன் எதைப்பற்றி எந்த வகையில் சிந்திக்கிறானோ அதை அதே வகையில் அனுபவிக்க ஆரம்பித்து விடுகிறான்.

நம்பிக்கையே வாழ்வின் ஆதாரம்! நம்பிக்கையே இனிமையான எதிர்காலங்களை அமைக்கும்!நம்பிக்கை அச்சாணி முறியாமல் இருந்தால்தான் வாழ்க்கைச் சக்கரம் சீராகச்சுழலும்!

**நம்பிக்கையை விதை, நல்லெண்ண நீரூற்று,**
**தடைகளை களையெடு, விடா முயற்சியை உரமாக்கு,**
**வெற்றிக்கனிகள் உன்வசமாகும்.**

# பண்படாத பயிர் பயன்படாது!

கடவுளிடம் ஒரு விவசாயி கடுமையாகச் சண்டைக்குப் போனான்.

"உனக்குப் பயிர்களைப் பற்றி என்ன தெரியும்? நீ நினைத்தபோது மழையை அனுப்புகிறாய். தப்பான சமயத்தில் காற்றை வீசுகிறாய். உன்னால் பெரிய தொந்தரவாக இருக்கிறது. பேசாமல், இந்த வேலைகளை விவசாயி ஒருத்தனிடம் ஒப்படைத்து விடேன்!" என்றான்.

கடவுள் உடனே, "அப்படியா? சரி. இனிமேல் வெளிச்சம், மழை, காற்று எல்லாம் உன் கட்டுப்பாட்டிலேயே இருக்கட்டும்" என்று வரம் அருளிவிட்டுப் போய்விட்டார்.

விவசாயிக்கு சந்தோஷம் பிடிபடவில்லை. அடுத்த விதைப்பிற்கான பருவம் வந்தது. "மழையே பெய்" என்றான். பெய்தது. நிறுத்தச் சொன்ன போது, மழை நின்றது.

ஈரமான நிலத்தை உழுதான். தேவையான வேகத்தில் காற்றை வீசச் செய்து, விதையை தூவினான். மழை, வெயில், காற்று எல்லாமே அவன் சொன்ன பேச்சைக் கேட்டன. பயிர் பச்சைப்பசேல் என வளர்ந்தது. வயல்வெளியைப் பார்க்கவே மிகவும் ரம்மியமாக இருந்தது.

அறுவடைக் காலமும் வந்தது. விவசாயி ஒரு கதிரை அறுத்தான். அதனை உதிர்த்து, திறந்து பார்த்தான். அதிர்ந்தான். உள்ளே தானி யத்தைக் காணவில்லை, மிகச் சிறிய பதர்தான் இருந்தது. அடுத்தது, அதற்கடுத்தது என்று ஒவ்வொரு தானியக்கதிராக வெட்டி எடுத்து உடைத்துப் பார்த்தால் ஒன்றிலுமே தானியம் இல்லை.

"ஏ கடவுளே!" என்று கோபத்தோடு கூப்பிட்டான். "மழை, வெயில், காற்று எல்லாவற்றையுமே மிகச் சரியான விகிதங்களில்தானே பயன்படுத்தினேன்! ஆனாலும், பயிர்கள் பாழாகிவிட்டதே, ஏன்?" எனக் கேட்டான். கடவுள் புன்னகைத்தார்.

"என் கட்டுப்பாட்டில் இருந்தபோது காற்று வேகமாக வீசும். அப்போது பயிர்களெல்லாம், அம்மாவை இறுக்கிக் கொள்ளும் குழந்தைக ளைப்போல பூமிக்குள் தங்கள் வேர்களை மிக ஆழமாக அனுப் பிப் பிடித்துக் கொள்ளும்.

மழை குறைந்தால், தண்ணீரைத் தேடி வேர்களை நாலாபக்கமும் அனுப்பும்.போராட்டம் இருந்தால் தான் தாவரங்கள் தங்களைப் பாது காத்துக் கொண்டு, வலுவாக வளரும்.

எல்லாமே வசதியாக அமைத்துக் கொடுத்ததில் உன் பயிர்களுக்கு சோம்பேறித்தனம் வந்துவிட்டது. தளதளவென்று வளர்ந்ததே தவிர, ஆரோக்கியமான தானியங்களைக் கொடுக்க அவற்றிற்கு தெரிய வில்லை!" என்றார்.

வேண்டாமய்யா, உன் மழையும் காற்றும்! நீயே வைத்துக்கொள்" என்று கடவுளிடமே அவற்றைத் திருப்பித் தந்துவிட்டான் விவசாயி.

பிரச்சினைகள் உங்களைப் போட்டு அழுத்தும்போதுதான், உங்களின் திறமை அதிகரிக்கும். இருட்டு என்று ஒரு பிரச்சினை இருந்ததால் தான் மின்விளக்கு கண்டுபிடிக்கப்பட்டது. பயணம் என்பது பிரச் சினையான போதுதான் வாகனம் உருவானது.

பிரச்சினைகளே இல்லாமல் இருந்துவிட்டால் நம் மூளையின் திறனை எவ்வாறு அறிவீர்கள்? எதிர்பாராத திருப்பங்கள் தானே நம் வாழ்க்கையைச் சுவையாக அமைத்துத்தர முடியும்.

## சிவலிங்க தரிசனம்

காலையில் தரிசனம் செய்தால் நோய்கள் குணமாகும்.

நண்பகல் தரிசனம் செய்தால் செல்வம் பெருகும்.

சாயங்கால தரிசனம் செய்தால் பாவங்கள் போகும்.

இரவு (அர்த்தயாமம்) 09 மணி தரிசனம் முக்தி அளிக்கும்.



## நமக்கு உயர்வைத் தரும் ஐந்து

1. சிவபெருமானின் திருவடிக் கமலங்கள்.

2. அவர் திருப்பாதங்களைப் பூசிக்க நீர்.

3. அப்பெருமானை (அர்ச்சிப்ப தற்கு) வாழ்த்தி வணங்குவ தற்குத் தமிழ் வேதப்பாடல்களும் வாசனையுள்ள மலர்களும்.

4. சிந்திப்பதற்குத் திரு ஐந்தெ ழுத்து (சிவாயநம).

5. அணிந்து மகிழ திருவெண் ணீறு.

# படிப்பது அவர்கள் விருப்பம் !!!

குழந்தைகளிடம், உங்களது இஷ்டத்தை திணித்து, "டொக்டருக்குப் படி, இன்ஜினியருக்குப் படி," என்று கட்டாயப்படுத்தக் கூடாது.

ஒரு வீட்டில் இருந்த கோழியை திறமைசாலியென நினைத்த மரங் கொத்தி, வாத்து, குயில் ஆகியவை அதனிடம் பாடம் படிக்க வந்தன. ஒருமுறை, அவை பயிற்சிக்காக வெளியே கிளம்பின. செல்லும்வழி யில் கோழியிடம் குயில், "களைப்பு தெரியாமல் இருக்க பாட்டுப் பாடட் டுமா! என்றது. "ஐயையோ வேண்டாம்! பாடினால் தொண்டை கட்டிக் கொள்ளும். பிறகு உன் அம்மாவிடம் என்னால் பதில்சொல்ல முடியாது," என்றது கோழி.

அவை ஒரு ஆற்றங்கரையை அடைந்தன. வாத்து கோழியிடம், "எனக்கு நன்றாய் நீந்தத்தெரியும்! நான் இதில் நீந்தட்டுமா?" என் றது. 'சரியாப் போச்சு! தண்ணி உன்னை அடிச்சுட்டு போயிட்டா, உன் அப்பாவுக்கு யார் பதில் சொல்றது! கப்சிப்! பேசாமல் என்னுடன் வா," என கண்டித்தது கோழி.

மரங்கொத்தி கோழியிடம், "நீங்க குயிலிடமும், வாத்திடமும் சொன் னது சரிதான். ஆனால், நான் என் அலகால் இந்த மரத்திலுள்ள புழுக்களைக் கொத்திப் போடுகிறேன். எல்லாரும் விருந்துண்ண லாமே!" என்றது. "அதுவும் வேண்டாம்" என்ற கோழி, "மரத்தில் கொத்தும் போது, உன் அழகான அலகு உடைஞ்சு போனா, அதுக்கு யார் பொறுப்பு?" என்றது.

அந்தந்த பறவைகள் அதனதன் சுபாவத்தில், திறமை வாய்ந்தவையாக இருந்தும், கோழி தன்னைப் போலவே அவற்றையும் நினைத்துக் கொண்டதால், அதனதன் துறையில் மிளிரவிடா மல் தடுத்து விட்டது.

இந்தக் கோழியைப் போல் இல்லாமல், அவரவருக்கு விருப்பமான துறையில் பிள்ளைகளைப் படிக்க வைக்கப் பெற் றோர் முயல வேண்டும் ●



## ரவீந்திரநாத் தாகூர்



கடினமான நிலத்தைப் பண்படுத்தும் உழவனிடமும், சாலை அமைக்கும் போது கல்லுடைக்கும் தொழிலாளியிடத்தும் இறைவன் இருக்கின்றான். ஆனால், இறைவன் சாமானியர்களான நம் கண்ணுக்குத் தெரிவதில்லை.

மனிதன் மெய்யறிவு பெற்று விட்டால், மீண்டும் குழந்தை நிலையை அடைகின்றான். அந் நிலையை எதிர்பார்த்து இறைவன் நமக்காக காத்து நிற்கிறான். பெண்கள் மகிழ்ச்சியோடு இருப்பதில் தான் ஒட்டுமொத்த குடும்பத்தின் மகிழ்ச்சியே அடங்கி இருக்கிறது. வாழ்வின் இசை என்பதே பெண்களின் சிரிப்பில்தான் புதைந்து கிடக்கிறது.

மனித உறவுகள் அன்பினாலே பிணைக்கப்பட்டுள்ளன. அன்பு என்னும் பாலத்தின் வழியாகப் பயணம் செய்தால்தான், நம் வாழ்க்கை சுவையானதாகவும், பொருளுடையதாகவும் இருக்கும்.

---

## சுவாமி விவேகானந்தர் கூறும் அறிவுரை:



உங்கள் வாழ்க்கை உங்கள் கையில் என்பதை உறுதியாக நம்புங்கள் என்கிறார் சுவாமி விவேகானந்தர். உங்கள் உடலையும், உள்ளத்தையும், அறிவையும், ஞானத்தையும் பலவீனப்படுத்துகின்ற எந்த விஷயத்தையும் நஞ்செனஒதுக்கித் தள்ளுங்கள்.

போதுமான அளவுக்கு நீங்கள் கண்ணீர் விட்டு அழுது விட்டீர்கள். இனியும் அழத் தேவையில்லை. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு விழித்தெழுந்து, செயலாற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது.

**விழிமின், எழுமின், செயல் முடியும்வரை உழைமின்** என்று உரத்த குரலில் நமக்கு அவர் உணர்த்துகிறார்.



## உலகில் மகிழ்ச்சி தரக்கூடியது எது?

தஞ்சையை ஆண்ட மன்னர் இராஜராஜ சோழனுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது.

உலகில் அனைவருக்கும் மகிழ்ச்சியை தரக்கூடிய பொருள் எது என்பதே அவர் கேள்வி. "மன்னரின் கேள்விக்கான சரியான விளக்கத்தை அறிஞர்கள் மட்டுமல்லாமல் மக்களும் அளிக்கலாம். அனைவரையும் மகிழ்விக்கும் பொருளை அரண்மனையில் இருக்கும் கொலுமண்டபத்தில் வைத்துவிடுங்கள் என ஆணையிட்டார்.

யாருடைய பொருள் அரசருடைய சந்தேகத்திற்கு சரியான விடை தருகிறதோ அவருக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசு." என அறிவிக்கப்பட்டது. மக்களும் யோசித்து, அவர்களுக்கு தெரிந்து மகிழ்ச்சியை தரும் பொருட்கள் எவையோ அவற்றை கொண்டு வந்து அரண்மனை கொலு மண்டபத்தில் வைத்துவிட்டு ஆயிரம் பொற்காசுகள் பரிசுக்காக காத்திருந்தார்கள்.

மறுநாள், மன்னர் ராஜராஜ சோழர் கொலு மண்டபத்திற்கு வந்து பார்த்தார். மக்கள் வைத்த பொருட்கள் மண்டபத்தில் நிரம்பி இருந்தது. ஒவ்வொரு பொருட்களாக அரசர் பார்த்துக் கொண்டே வந்தார்.

முதலில், சிறியளவு பொன் இருந்தது. அதன்கீழே, "செல்வமே மகிழ்ச்சி தரக்கூடியது" என எழுதப்பட்டிருந்தது. ஆனால், "செல்வந்தர்களுக்கும், நோயாளிகளுக்கும் செல்வம் எப்படி மகிழ்ச்சியை தரும்?"

அதனால் இது சரியான விளக்கம் அல்ல." என அதை நிராகரித்தார் மன்னர்.

அடுத்ததாக, இசைக்கருவி இருந்தது. அதன் கீழே, "இசையே மகிழ்ச்சி தரக் கூடியது" என எழுதப்பட்டிருந்தது. ஆனால், "காது கேட்காதவர்களுக்கு இந்த இசை எப்படி மகிழ்ச்சியை தர முடியும்? இதையும் ஏற்றுக்கொள்ள முடியாது." என நிராகரித்தார்.

அடுத்து, அழகான மலர்கள் இருந்தன. "இவை, கண் தெரியாதவர்களுக்கு எப்படி மகிழ்ச்சியைத் தரமுடியும்?. அதனால் இதையும் ஏற்றுக் கொள்ள முடியாது"

"அடுத்து. இனிப்பான பலகாரங்கள் இருந்தது. "நோயாளிகளுக்கு எப்படி இனிப்பு மகிழ்ச்சியை தரும்?" என்று கூறி அதனையும் நிராகரித்த மன்னர் இராஜராஜ சோழர் அடுத்ததாக ஒரு பெரிய சிவலிங்கத்தின் அருகில் வந்தார். அந்த சிவலிங்கத்தின் கீழே ஒரு சிற்பம். அதில் ஒரு தாய், பசியில் இருக்கும் ஒரு சிறுவனுக்கு உணவு தருவது போல அந்த சிற்பம் வடிவமைக்கப்பட்டிருந்தது. அந்த சிற்பத்தின் கீழே "அன்பே சிவம்" என்று எழுதப்பட்டிருந்தது. இந்த சிலையை வைத்த சிற்பியை அழைத்து வாருங்கள் என்றான் மன்னன்.

மன்னர். வறுமை தின்ற உடலுடன் ஒரு ஏழை சிற்பி, மன்னரின் முன் அழைத்து வரப்பட்டார். "நீங்கள்தான் இந்த சிலையை இங்கு வைத்தீரா? இதன் பொருள் என்ன என்பதை விளக்கமாக சொல்லுங்கள்." என்றார் மன்னர் அந்த சிற்பியிடம்.

"அரசே நான் ஒரு சிற்பி, இந்த சிலையை வடிவமைத்தது அடியேன் தான். சிவலிங்கத்தின் கீழே ஒரு பெண்மணி அன்போடு ஒரு சிறுவனுக்கு உணவு தருகிறாள்.

இந்த உலகில் அன்பை மட்டும்தான், கண் தெரியாதவர்ளும், காது கேட்காதவர்களும், வாய் பேச முடியாதவர்களும் உணர முடியும். அதேபோல் உடல் நலம் இல்லாதவர்களும் அன்பைதான் எதிர்பார்க்கிறார்கள். அன்பு மட்டுமே உலகில் சிறந்தது.

அன்பிருந்தால் எதிரியையும் நண்பனாக்கும். அன்பு இல்லையெனில் நண்ப னையும் எதிரியாக்கும். உலகில் சிறந்ததும், அனைத்து ஜீவராசிகளுக்கும் மகிழ்ச்சியை தரக்கூடியதும் அன்பைத்தான். அன்பு தான் இறைவன்.

அதனால்தான் சிவலிங்கத்தின் கீழே தாயன்பு கொண்ட ஒரு பெண் மணியை வடிவமைத்து. "அன்பே சிவம்" என்று எழுதிவைத்தேன்." என விளக்கினார் சிற்பி.

இதை கேட்ட அரசர் மிகவும் மகிழ்ந்தார். "உலகத்திலேயே அனை வருக்கும் மகிழ்ச்சி தரக்கூடியது எது என்ற என் சந்தேகத்திற்கு அற்புதமான விளக்கம்.

நீங்கள் ஒரு சிற்பி என்பதால் நான் கட்டும் தஞ்சை கோவிலுக்கு நீங்களே சிற்ப வேலையை செய்யுங்கள்." என்று கூறி ஆயிரம் பொன்னையும் பரிசாக சிற்பிக்கு தந்து. ஏழை சிற்பியின் வாழ்க்கை தரத்தை உயர்த்தினார் அரசர்.

அன்புக்கு கட்டுப்படாதவர்கள் இந்த உலகத்தில் யார் இருக்கிறார் கள்?. அன்பு தான் அனைத்து ஜீவராசிகளுக்கும் மகிழ்ச்சியை தரக்கூடியது ●

---

### வேதாத்ரி மகரிஷி



மனம்தான் மனித வாழ்வின் விளைநிலம். அதை செம்மையாக வைத்துக் கொண்டால் வாழ்வு வளம்பெறும். மனதை அடக்க நினைத்தால் அலையும். அதை அறிய நினைத்தால் அடங்கும். தவறு செய்வதும் மனம்தான். இனி தவறு செய்யக்கூடாது என்று தீர்மானிப்பதும் மனம்தான். அன்றாடம் மனம் பலவிதமான விஷயங்களில் அலையவிட்டு தடுமாற்றம் பெறுகிறது. குறிப்பிட்ட நேரம் தியானம் செய்து மனதை தூய்மைப்படுத்தினால் மனநலம் மேம்பாடு அடையும்.

வாழ்வில் இடையிடையே சிக்கல்கள் ஏற்படுவது இயற்கையே. அதைக் கண்டு மிரள்வது அறிவுடைமை ஆகாது. அவற்றை எப்படி எதிர்கொள் வது என்று சிந்தித்து தீர்வு காண்பதே சிறந்தது. கவலைப்படுவதால் மட் டுமே சிக்கலில் இருந்து மீளமுடியாது. இன்னும் சொல்லப்போனால் கவலையின் போது பிரச்னை மேலும் பெரிதாகிவிடும்.

தீர்க்க முடியாத துன்பம் என்ற ஒன்று வாழ்வில் கிடையவே கிடையாது. தீர்க்கும் வழிவகைகளை அறியாமல் தான் நாம் துன்பத்தைக் கண்டு அஞ்சுகிறோம். திறக்க முடியாத பூட்டு எதுவுமில்லை. அதற்கான சரியான சாவியைத் தேடிப்பிடித்தால் போதும்.




# இஸ்ரேல்!

84 நோபல் பரிசுகள் பெற்ற ஒரே நாடு.... உங்களுக்கு தெரியுமா?

ஒரு குட்டிநாடு மொத்தமே ஒன்றரை கோடி தான் மக்கள் தொகை. ஆனால் உலகத்தையே அவர்கள் தான் மறைமுகமாக ஆள்கிறார்கள் எப்படி? அந்த நாட்டை பற்றி, மக்களை பற்றிய சிறுகுறிப்புகள்.

கல்லூரியில்சேர முதலில் 5000 டாலர் கொடுத்து ஏதாவது ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து 15 பேருக்கு வேலை கொடுத்த பின்பு அதை 15000 டாலர் ஆக்கினால்தான் கல்லூரியில் சீட் கிடைக்குமாம். இதனால் இன்று உலகத்தில் உள்ள பாதி முக்கிய ப்ரெண்டெட் நிறுவனங்கள் அந்த நாட்டை சேர்ந்தவை தான்.

உலகத்தில் உள்ள அனைத்து சிறுவர் கார்ட்டூன் படங்களை தயாரிப்பது அவர்கள் தான் அவர்கள் நாட்டின் குழந்தைகள் அதை பார்ப்பதில்லை அங்கு அது தடை செய்யப்பட்டுள்ளது.


உலகத்தில் முதன்முதலாக தற்பொழுது வங்கிகளில் கடன் கொடுக்கும் கடன் வாங்கும் விதத்தை உலகத்துக்கு கத்து கொடுத்தது இவர்கள் தான்.

கர்ப்பிணி பெண்கள் தொலைக்காட்சி, சினிமா பார்க்க அனுமதிக்கப் படுவதில்லை, அதற்கு பதில் கர்ப்பமாக இருக்கும் பொழுது கணக்கு ஆங்கிலம் போன்ற பல மொழிகளில் பாடம் படிப்பார்களாம், அப் பொழுது பிறக்கும் குழந்தைகள் அறிவாக பிறக்கிறார்களாம்.

உலகத்தில் அதிகம் நோபல் பரிசு வென்றவர்கள் இந்த நாட்டில் தான் மொத்தம் 84 பேர். உலகத்தில் மெத்த படித்த மேதாவிகளும் உலகத்தை மறைமுகமாக ஆளும் தந்திரமும் மிக்கவர்கள் உள்ள ஒரே நாடு. இவர்களை யாரும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இப்படி இன்னும் ஏராளமான விஷயங்கள் அந்த நாட்டைப் பற்றி தெரிந்த உடன், இப்பொழுது தெரிகிறது அவர்கள் எல்லோரையும் ஆள என்ன காரணம் என்று. அந்த நாடு தான் இஸ்ரேல்.

# ஒவ்வொரு நொடியும் வாழ்!



ஒரு கிராமத்தில் வசித்து வந்த ஒரு மனிதன் இறந்து விட்டான். அவன் அதை உணரும்போது கையில் ஒரு பெட்டியுடன் கடவுள் அவன் அருகில் வந்தார்.

கடவுள்: "வா மகனே... நாம் கிளம்புவதற்கான நேரம் நெருங்கி விட்டது..."

ஆச்சரியத்துடன் மனிதன் "இப்பவேவா? இவ்வளவு சீக்கிரமாகவா? என்னுடைய திட்டங்கள் என்ன ஆவது?"

"மன்னித்துவிடு மகனே... உன்னைக் கொண்டு செல்வதற்கான நேரம் இது..."

"அந்தப் பெட்டியில் என்ன உள்ளது?". "உன்னுடைய உடைமைகள்"

"என்னுடைய உடைமைகளா...?!. அதாவது உன்னுடைய பொருட்கள், உடைகள், பணம்...?", "இவை அனைத்தும் உன்னுடையது அல்ல... அவை பூமியில் நீ வாழ்வதற்கானது..."

"என்னுடைய நினைவுகள்...?". "அவை கண்டிப்பாக உன்னுடையது கிடையாது... அவை காலத்தின் கோலம்..."

"என்னுடைய திறமைகள்...?". "அவை கண்டிப்பாக உன்னுடையது கிடையாது... அவை சூழ் நிலைகளுடன் சம்பந்தப்பட்டது..."

"அப்படியென்றால் என்னுடைய குடும்பமும் நண்பர்களும்...?"

"மன்னிக்கவும்...., குடும்பமும் நண்பர்களும் நீ வாழ்வதற்கான வழி..."

"அப்படி என்றால் என் மனைவி மற்றும் மக்கள்?". "உன் மனைவியும் மக்களும் உனக்கு சொந்தமானது கிடையாது.... அவர்கள் உன் இதயத்துடன் சம்பந்தப்பட்டவர்கள்..."

"என் உடல்...?", "அதுவும் உன்னுடையது கிடையாது... உடலும் குப்பையும் ஒன்று..."

"என் ஆன்மா?". "இல்லை.... அது என்னுடையது..."

மிகுந்த பயத்துடன் மனிதன் கடவுளிடமிருந்து அந்தப் பெட்டியை வாங்கி திறந்தவன் அதிர்ச்சிக்குள்ளாகிறான்... காலிப் பெட்டியைக் கண்டு... கண்ணில் நீர்வழிய கடவுளிடம் "என்னுடையது என்று எதுவும் இல்லையா?" எனக் கேட்க,

கடவுள் சொல்கிறார். "அதுதான் உண்மை. நீ வாழும் ஒவ்வொரு நொடி மட்டுமே உன்னுடையது. வாழ்க்கை என்பது நீ கடக்கும் ஒரு நொடிதான்.ஒவ்வொரு நொடியையும் சந்தோஷமாக வாழ்வது டன், நல்ல செயல்களை மட்டும் செய். எல்லாமே உன்னுடையது என்று நீ நினைக்காதே...."

ஒவ்வொரு நொடியும் வாழ் உன்னுடைய வாழ்க்கையை வாழ். மகிழ்ச்சியாக வாழ மறக்காதே... அது மட்டுமே நிரந்தரம்... உன் இறுதிக் காலத்தில் நீ எதையும் உன்னுடன் கொண்டு போக முடியாது.

## புத்தர்



பிறர் விஷயங்களில் மட்டும் கவனம் செலுத்தி அவர்களுடைய குறைகளையே காணுபவர்கள், பிறரைப் பற்றி புறஞ்சொல்லும் குணமுடையவர்கள். இறுதியில் தங்களுடைய குறைகளை திருத்த முடியாமல் தவிப்பார்கள்.

மழைத் தண்ணீர் மேட்டு நிலத்தில் தங்கி நிற்பதில்லை. பள்ளமான இடத்துக்கு ஓடி வந்து விடுகிறது. அது போல் இறையருள், தற்பெருமையும், கர்வமும் உள்ளவர்களுடைய உள்ளத்தில் தங்கி நிற்பதில்லை. பணிவுள்ளவர்களின் உள்ளத்தில்தான் தங்கிநிற்கும்.




**அன்று** அந்தச் சிறுவனை அழைத்துக் கொண்டு அவனது தந்தை ஒரு காட்டிற்குச் சென்றார். அப்போது மகனுக்கு ஒரு சவாலை முன் வைத்தார்.

'மகனே, இப்போது உனக்கு முன் ஒரு பெரிய சவால் உள்ளது. அதில் வெற்றி பெற்றால், நீ பெரிய வீரனாகி விடு வாய். இன்று இரவு முழுவதும் நீ தனியாக இந்தக் காட்டிலேயே இருக்க வேண்டும். உன் கண்கள் கட்டப்படும். ஆனாலும் நீ பயப்படக்கூடாது வீட்டிற்கு ஓடிவந்து விடவும் கூடாது" என்றார்.

சிறுவன் ஆர்வத்துடன் சவாலை சந்திக்கத் தயாரானான். அவனது கண்களைத் தந்தை துணியால் இறுகக் கட்டினார். பிறகு, தந்தை திரும்பிச் செல்லும் காலடி ஓசை, மெல்ல மெல்ல மறைந்தது.

அதுவரை தந்தை அருகில் இருக்கிறார் என்ற தைரியத்தில் இருந்த அவனுக்கு, தூரத்தில் ஆந்தை கத்துவதும் நரி ஊளையிடுவதும் நடுக்கத்தைக் கொடுத்தது.

காட்டு விலங்குகள் வந்து தாக்கிவிடுமோ என்ற அச்சத்தில் அவனது இதயத்துடிப்பு வழக்கத்தைத் தாண்டி எகிறியது.

மரங்கள் பேயாட்டம் ஆடின. மழைவேறு தூறத் தொடங்கியது. கடுங்குளிர் ஊசியாய் உடலைத்துளைத்தது. "அய்யோ! இப்படி நிர்க் கதியாய்த் தவிக்க விட்டு தந்தை போய்விட்டாரே! யாராவது வந்து என்னைக் காப்பாற்றுங்களேன்" என்று பலமுறை கத்திப் பார்த்தான். பயனில்லை.

சிறிது நேரத்தில், இனி கத்திப் பயனில்லை என்பது அவனுக்குப் புரிந்தது. திடீரென்று அவனுக்குள் ஒரு துணிச்சல். என்னதான் நடக்கும், பார்ப்போமே என்று சுற்றுப்புறத்தில் கேட்கும் ஓசைகளை ஆர்வத்துடன் கவனிக்கத் தொடங்கினான்.

இப்படியே இரவு கழிந்தது. விடியற்காலையில் இலேசாகக் கண் அயர்ந்தான். சூரியன் உடம்பைச் சுட்டபோதுதான், கண்கட்டைத் திறந்து பார்த்தான். கண்ணைக் கசக்கிக்கொண்டு எதிரே பார்த்த போது, அவனுக்கு ஆச்சரியம்! ஆனந்தம்! அழுகையே வந்துவிட்டது.

"அப்பா" என்று கூவி அருகில் அமர்ந்திருந்த தன் தந்தையைப் பாய்ந்து தழுவிக் கொண்டான்.

"அப்பா நீங்க எப்போ வந்தீங்க?" என்று ஆவலாகக் கேட்டான்.

சோர்வும் மகிழ்ச்சியும் கொண்டிருந்த அந்தத் தந்தை, "நான் எப்போது மகனே உன்னை விட்டுப் போனேன்" என்றார்.

"இரவு இங்குதான் இருந்தீங்களா? பிறகு ஏன் நான் பயந்து அலறியப் போதெல்லாம் என்னைக் காப்பாற்றவில்லை? ஏன் என்னிடம் எதுவும் பேசவில்லை?" என்று கேட்டான் மகன்.

"உன் மனோதிடம் வளர வேண்டும். நீ எதற்கும் அஞ்சாத வீரனாக வேண்டும் என்பதற்காக மௌனம் காத்தேன். ஏனென்றால் அச்சத் தின் உச்சத்தை எட்டும்போது, துணிச்சல் தானே வரும்" என்றார் தந்தை. மகனுக்கு தந்தையின் நோக்கம் புரிந்தது.

கடவுளும் அந்தத் தந்தையைப் போலத்தான், நம்மோடு இருக்கி றார். துன்பத்திலும் சோகத்திலும் தவிக்கும்போது துவண்டு விடா மல், நாம் தீரர்களாக வேண்டும் என்பதற்காகவே பல நேரங்களில் மௌனம் காத்து வெறும் பார்வையாளரைப்போல் இருக்கிறார்●

# மூன்று தலைகள்!

மாமன்னர் அசோகர் குடிமைப் பணிகளைப் பார்வையிட்டு அரண் மனை திரும்பிக் கொண்டிருந்தார். போரே வேண்டாம்... போரே மன்னனின் தொழில் என்றிருந்த அவர் புத்தரின் பாதையில் அன்பு வழி போதும் என மனதளவில் மாற்றம் அடைந்திருந்த நேரம்!

இப்போது அவருக்கு எதிரில் வந்து கொண்டிருந்த ஒரு வயோதிக துறவியும் அவரது சீடர்களும் மன்னருக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றனர்.

அசோகரின் பார்வை ஒதுங்கி நின்ற துறவி மீது பட்டது. உடனே தமது ரதத்தை நிறுத்திவிட்டு இறங்கிச் சென்று புத்த பிக்குவின் காலில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார். அவரது முடி துறவியின் காலில் பட்டது.

ஒரு புன்னகையுடன் துறவி தமது கைகளை உயர்த்தி மன்னனை ஆசீர்வதித்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அமைச்சருக்கு ஒரே சங்கடம்.

'எத்தனை பெரிய ராஜ்ஜியத்தின் அதிபதி... உலகமே வியக்கும் ஒரு பேரரசன் போயும் போயும் இந்த பரதேசியின் காலில் விழுந்து. முடியை வேறு காலில் பட வைத்துவிட்டாரே!' என்ற நினைத்து உள்ளுக்குள் கொஞ்சம் கோபமும் எரிச்சலும் அடைந்தார்.

அரண்மனை சென்றதுமே அசோகரிடம் தனது வருத்தத்தை வெளிப்படுத்தினார். அமைச்சரின் பேச்சைக் கேட்ட மன்னர் சிரித்தார். ஆனால் அமைச்சரின் கேள்விக்குப் பதிலளிக்கவில்லை. அவரிடமிருந்து ஒரு விசித்திர உத்தரவு வந்தது அமைச்சருக்கு.



"மந்திரியாரே... ஓர் ஆட்டுத் தலை, ஒரு புலித்தலை, ஒரு மனிதத் தலை மூன்றும் எனக்கு உடனே வேண்டும். ஏற்பாடு செய்யுங்கள்" என்றார் மன்னர்.

நாம் சொன்னதென்ன... இவர் உத்தரவென்ன... என்ற திகைப்புடன் கட்டளையை சிரமேற்கொண்டு ஏவலாட்களை நாடெங்கும் அனுப்பினார்.

ஆட்டுத் தலைக்கு அதிகம் கஷ்டப்படவில்லை. கறிக்கடையில் கிடைத்து விட்டது. புலித்தலைக்கு ரொம்பவே அலைய வேண்டி வந்தது. கடைசியில் ஒரு வேட்டைக்காரனிடம் அது கிடைத்தது.

ஆனால் மனிதத் தலை? உயிரோடிருப்பவனை வெட்டி தலையை எடுத்தால் அது கொலை... என்ன செய்யலாம் என யோசித்தபோது, வழியில் ஒரு சுடுகாடு தென்பட்டது. அங்கே புதைக்கக் கொண்டுவந்த ஒரு பிணத்தில் தலையை எடுத்துக் கொண்டனர்.

மன்னரிடம் கொண்டு போனார்கள். மூன்று தலைகளையும் பார்த்த அசோக மன்னர் தன் அமைச்சரிடம், "சரி, இம்மூன்றையும் சந்தையில் விற்று பொருளாக்கி வாருங்கள்," என்றார்.

மன்னரின் கட்டளைப்படி சந்தைக்குச் சென்றவர்களுக்கு ஆட்டுத் தலையை விற்பதில் எந்த சிக்கலும் இல்லை. பதிலுக்கு பண்டமும் கிடைத்தது.

புலியின் தலையை வாங்க யாரும் முன் வரவில்லை. பலரும் அதை வேடிக்கைதான் பார்த்தார்கள். கடைசியில் ஒரு பணக்காரர் தன் வேட்டை மாளிகையை அலங்கரிக்க அதை நல்ல விலை கொடுத்து வாங்கிக் கொண்டார்.

இப்போது மனிதத் தலைதான் மிச்சமிருந்தது. அதைப் பார்க்கவே யாரும் விரும்பவில்லை. அருவருத்து ஓடினர். வேறு வழியின்றி மனிதத் தலையுடன் அரண்மனைக்கே திரும்பினர் ஏவலாட்கள்.

மன்னரிடம் போய், விவரத்தைச் சொன்னார் அமைச்சர். "அப்படியா... சரி, யாரிடமாவது இலவசமாகக் கொடுத்துவிட்டு வந்துவிடுங்கள்", என்றார் மன்னர்.

ஒரு நாளெல்லாம் அலைந்தும் இலவசமாகக் கூட அதனை பெற்றுக் கொள்ள யாருமே முன் வரவில்லை.விஷயத்தைக் கேட்ட

அசோக மன்னர் புன்சிரிப்புடன் இப்படிக் கூறினார்:

"மந்திரியாரே... நீங்கள் தெரிந்து கொண்டது என்ன?" என்றார்.

அமைச்சர் மௌனம் காத்தார்.

"மனிதனின் உயிர் போய்விட்டால் இந்த உடம்புக்கு மரியாதை ஏது? சக மனிதன்தானே? வாங்கி வைத்துக் கொள்ளலாம் அல்லவா? ஆனால் நடை முறையில் இலவசமாகக் கொடுத்தாலும் அருவருத்து ஓடுகிறார்கள்... இதை யாரும் தொடக்கூட மாட்டார்கள்.


இருந்தும் இந்த உடம்பு உயிரும் துடிப்புமாக உள்ளபோது என்ன ஆட்டம் ஆடுகிறது! செத்த பின்பு நமக்கு மதிப்பில்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால், உடலில் உயிர் இருக்கும்போது. தம்மிடம் எதுவும் இல்லை என்றுணர்ந்தவர்கள்தான் ஞானிகள். அத்தகைய ஞானிகளை விழுந்து வணங்குவதே ஞானத்தைப் பெறும் முதல் வழி..!" என்றார்.

அமைச்சர் தலைகவிழ்ந்து நின்றார்!

**அன்னை திரேசா:**

இந்த உலகில் நாம்நம் கண் முன்னால் காணும் ஒவ்வொரு வரையும் நேசிக்க இயல வில்லை என்றால் கண்ணுக் குத் தென்படாத கடவுளிடம் எவ்வாறு அன்பை செலுத்த இயலும்.

நீ பிறரின் குணாதிசயங்க ளைக் கணிக்கத் துவங்கினால் அவர்பால் அன்பு செலுத்த நேரம் இருக்காது.



# இதுவும் கடந்து போகும்

வாழ்க்கைக்கு மிக முக்கியமான தத்துவம்...

நம்முடைய இதுநாள் வரை... வாழ்க்கையையும் திரும்பிப் பார்த்தால் இந்த வாக்கியத்தின் மகத்தான உண்மையை உணர முடியும்.

எத்தனை வெற்றிகள்,...

எத்தனை தோல்விகள்,...

எத்தனை மகிழ்ச்சிகள்,...

எத்தனை துக்கங்கள்...

எல்லாம் வந்து சிறிது காலம் தங்கி கடந்து போயிருக்கின்றன.

வந்ததெல்லாம் நம்மை விட்டுப் போவதால் நம்முடையதல்ல என்பது உறுதியாகிறதல்லவா?

வந்து போவதெல்லாம் நம்முடையதல்ல என்பதால் நாம் வெறும் பார்வையாளர்களே அல்லவா?

எத்தனை நண்பர்கள்,...

எத்தனை பகைவர்கள்,...

எத்தனை உறவுகள்...

நம் வாழ்வில் முக்கிய அங்கம் வகித்து வெறும் நினைவுகளை மட்டும் நம்மிடம் விட்டு விட்டுப் போயிருக்கிறார்கள்?

வாழ்வில் வந்ததெல்லாம் நம்மைக் கடந்து சென்று கொண்டு தானே இருக்கின்றன.

ஒரு விதத்தில் என்றும் நாம் தனியர்களே அல்லவா?

இயற்கையின் விதியே இது என்று உளமார உணர்ந்து தெளியும் போது கிடைக்கும் அமைதி சாதாரணமானது அல்ல.

அந்த அமைதியை மனதில் நிரந்தரமாக்கிக் கொள்ளுங்கள்.

வெற்றிகள் கிடைக்கும் போது...

"இதுவும் கடந்து போகும்" என்பதை நினைவில் கொள்ளுங்கள்...

கர்வம் தலை தூக்காது.

தோல்விகள் தழுவும் போது...,

"இதுவும் கடந்து போகும்" என்பதை நினைவில் கொள்ளுங்கள்...

சோர்ந்து விட மாட்டீர்கள்.

நல்ல மனிதர்களும், நண்பர்களும் உங்கள் வாழ்க்கையில் வரும் போது...

"இதுவும் கடந்து போகும்" என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இருக்கும் போது - அவர்களை கௌரவிப்பீர்கள்.

அவர்கள் விலகும் போது பெரிதாக பாதிக்கப்படாமல் இருப்பீர்கள்.

தீய மனிதர்களும், பகைவர்களும் உங்கள் வாழ்வில் வரும் போது...,

"இதுவும் கடந்து போகும்" என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

தானாகப் பொறுமை வரக் காண்பீர்கள்.

பெரிதாக மனஅமைதியை இழக்க மாட்டீர்கள்.

நெற்றி சுருங்கும் போதெல்லாம்....

"இதுவும் கடந்து போகும்" என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

சுருக்கம் போய் முகத்தில் புன்னகை தவழக் காண்பீர்கள்.

வாழ்க்கையின் ஜீவநாதமாக இந்த உண்மை உங்கள் இதய ஆழத்தில் பதிந்து போய் விட்டால்...

அந்தப் புன்னகை நிரந்தரமாக உங்கள் முகத்தில் தங்கி விடுவதை மற்றவர்கள் காண்பார்கள்...

# குழந்தை வளர்ச்சி - இளம்பருவ கற்கும் தன்மை குறித்து அறிந்துகொள்ள வேண்டியவைகள்...



1. குழந்தைப் பருவத்தின் முதல் எட்டு வருடங்கள் குறிப்பாக முதல் மூன்று வருடங்கள் ஒரு குழந்தைக்கு கிடைக்கும் பராமரிப்பு, அவன் அவளுடைய வாழ்க்கை முழுவதிற்கும் மிகவும் முக்கியமானதாகும்.

2. பிறந்தது முதல், குழந்தைகள் சீராக கற்கவும் துவங்குகிறார்கள். சத்தான உணவு மற்றும் நேர்த்தியான பராமரிப்போடு அன்பு, அரவணைப்பு, மனரீதியான ஊக்கம் போன்றவற்றை குழந்தைகள் பெறும்பொழுது, அவர்கள் வளர்வதோடு விரைவாக கற்கவும் செய்கின்றனர்.

3. குழந்தைகள் விளையாடவும் புதிய காரியங்களைக் கற்றுக் கொள்ளவும் ஊக்கப்படுத்துதல், அவர்கள் சமூகம், உடல், உணர்வு மற்றும் அறிவுபூர்வமாக கற்கவும், வளரவும் உதவுகிறது.

4. குழந்தைகள் தங்களுக்கு மிக நெருக்கமாக இருப்பவர்களைப் பார்த்து தாங்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் எனக் கற்றுக் கொள்கின்றனர்.

5. குழந்தைகளுடைய வளர்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியன சீராக இல்லாது இருப்பதைக் காண்பிக்கும் எச்சரிக்கை அடையாளங்களைப் பெற்றோரும், குழந்தைக் கவனிப்பாளர்களும் அறிந்திருக்க வேண்டும்.

அன்பும் பராமரிப்பும் முதல் வருடத்தில் ஒரு குழந்தையின் வளர்ச்சிக்கு உதவியாய் இருக்கிறது. குழந்தைகளை தூக்கி வைத்துக் கொள்ளல், கட்டித் தழுவுதல், பேசுதல் போன்றவைகள் குழந்தைகளுடைய உடல் மற்றும் மனரீதியான வளர்ச்சியை தூண்டுகிறது. தாயோடு நெருங்கி இருத்தல், தேவையான போது பாலூட்டுதல் முதலியன குழந்தைகளுக்கு பாதுகாப்பு உணர்வைத் தருகிறது. குழந்தை தனது ஊட்டச் சத்துக்காகவும், சுகத்திற்காகவும் தாயினிடத்தில் பால் அருந்துவது அவசியம்.

ஆண் மற்றும் பெண் குழந்தைகளுக்கு உடல், மனம், உணர்வு, சமூக ரீதியான தேவைகள் ஒன்றே. இருபாலரும் ஒரே அளவான கற்றுக்கொள்ளும் திறமையைப் பெற்றுள்ளனர். மேலும் அவர்களுக்கு அன்பு, கவனிப்பு, அங்கீகரிப்பு முதலியன சம அளவில் தேவைப்படுகிறது.

அழுவதன் மூலம் குழந்தை தன்னுடைய தேவைகளைத் தெரியப்படுத்துகிறது. குழந்தையின் அழுகைக்கு, அவர்களை தூக்கி எடுத்து மென்மையாக பேசி பதிலளிப்பது அவர்களுடைய நம்பிக்கையையும் பாதுகாப்பையும் நிலைப்படுத்த உதவுகிறது.

இரத்த சோகையுடனும், சத்துக்குறைவுடனும், அடிக்கடி சுகவீனமடைகிற குழந்தைகள் ஆரோக்கியமான குழந்தைகளைவிட எளிதில் பயப்படுகிற, மனமடிவடைகிறவர்களாக மாறுகின்றனர். மேலும் விளையாடுதல், மற்ற குழந்தைகளுடன் கலந்துரையாடுதல், புதிய காரியங்களை கற்றுக் கொள்ளுதல் போன்றவற்றில் உற்சாகம் அற்று காணப்படுவர். இம்மாதிரியான குழந்தைகள் நன்கு சாப்பிடுவதற்கு மிகுந்த கவனிப்பும் ஊக்கப்படுத்தப்படுதலும் தேவை.

குழந்தைகளுடைய உணர்வுகள் உண்மையானது மற்றும் வலிமையானது. அவர்களால் ஏதாவது ஒன்றை செய்ய முடியாமற் போனாலோ அல்லது தங்களுக்குத் தேவையான ஒன்றைப் பெற முடியாமற் போனாலோ ஏமாற்றமடைந்தவர்களாக மாறுகின்றனர். இருட்டைப் பார்த்தும் அந்நியர்களைக்கண்டும் குழந்தைகள் பயப்படுகின்றனர். தங்கள் உணர்வுகள் நகைப்புக்கும், தண்டனைக்கும்,



பிரிடிசன் நூலகம் யாழ்ப்பாணம்.



நிராகரிப்புக்கும் உரியதாகும்போது, குழந்தைகள் கூச்சப்படுகிறவர்களாக, தங்கள் உணர்வுகளை சாதாரணமாக வெளிப்படுத்த இயலாதவர்களாக வளர் கின்றனர். குழந்தைகள் தங்கள் வலிமை மிக்க உணர்வுகளை வெளிப்படுத்தும் போது, பொறுமையோடும் பரிவோடும் நாம் கேட்போமானால், குழந்தைகள் மிகவும் சந்தோஷமாக, பாதுகாப்பாக, சம்நிலை உடையவர்களாக வளர ஏதுவாகிறது.

உடலளவில் தண்டிக்கப்படுதல் மற்றும் கொடுமையாக நடத்தப் படுதல் போன்றவை குழந்தைகளின் வளர்ச்சிக்கு பெரும் தீமை யாகும். குழந்தைகளை கோபத்தோடு தண்டிக்கும்பொழுது, அவர் கள் கொடுமையானவர்களாக மாறுகிறதற்கு ஏதுவாகிறது. எதைச் செய்ய வேண்டும் என்பதைக் குறித்தும், எதைச் செய்யக் கூடாது என்பதற்கான உறுதியான விதிகளைக் குறித்தும் குழந்தைகளுக்கு தெளிவாக விளக்குதல், அவர்களது நன்நடத்தைகளை பாராட்டுதல் போன்றவை குழந்தைகளை குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் உரிய மிகவும் பிரயோஜனமுள்ளவர்களாக மாற்றுகிற சிறந்த வழிமுறை களாகும்.

குழந்தைகளை கவனிப்பதற்கு பெற்றோர் மற்றும் அனைத்து குடும்ப உறுப்பினர்களும் ஈடுபட வேண்டும். குறிப்பாக தந்தையி னுடைய பங்கு முக்கியமானதாகும். குழந்தைகளுக்குத் தேவை யான அன்பு, அரவணைப்பு மற்றும் மனரீதியான ஊக்கம் முதலி யன அவர்களுக்கு கிடைப்பதற்கு குழந்தையின் தந்தை உதவியாக இருக்கிறார். அதோடு, தரமான கல்வி, நல்ல சத்துணவு மற்றும் பராமரிப்பு போன்றவை குழந்தைகள் பெறுவதற்கு உறுதுணை யாகவும் இருக்கிறார். குழந்தையின் வீட்டுச்சூழல் பாதுகாப்பாகவும், மகிழ்ச்சிகரமாகவும் இருப்பதற்கு தந்தையின் பங்கு மிகமுக்கியம். தாயானவளின் கர்ப்ப காலத்தின் போதோ அல்லது குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டும் போதோ, தகப்பன் வீட்டு வேலைகளை யும் செய்யலாம் ●





# கலைகள்

ஒரு நாட்டின் கலை மற்றும் கலாச்சாரம் அச்சமூகத்தினைப் பிரதி பலிக்கும் சிறந்த கருவியாகும்.

கலை என்பது பொழுது போக்கிற்காக மட்டுமின்றித் தகவல் ஊடக மாகவும், கலாச்சாரப் பலகனியாகவும் திகழ்கின்றது. கலை என்பது மன உணர்வுகளின் வெளிப்பாடு.குறிப்பாக நாடகக் கலைகள் நமது மண்ணோடு, நம்மோடு தொடர்புடையவை. நமதுபாரம்பரியத்தையும் அடி ஆழத்து வேர்களையும் பிரதிபலிப்பவை. கலை, சமூக வளர்ச் சிக்கும், மனஎழுச்சிக்கும் சிறந்த கருவி.

நமது முன்னோர்களின் நம்பிக்கைகள், எண்ணங்கள், சிந்தனை கள், பழக்க வழக்கங்கள், ஆகியவற்றை நாட்டுப்புறக் கலைகள் மூலம் அறியமுடிகிறது. இக்கலைகளே சமுதாயத்தின் ஆவண மாகத் திகழ்கின்றன. இக்கிராமியக் கலைகளே, தகவல் பரப்பும் ஊடகமாகவும் பழக்கவழக்கப் பண்பாட்டுப் பெட்டகமாகவும் திகழ்ந் துள்ளன.

இன்று தொழில் நுட்பத்தின் அசுர வளர்ச்சியான தகவல் தொடர்பிற் கும் பொழுது போக்கிற்கும் பல்வேறு ஊடகங்கள் உருவாகி வரு கின்றன. இம்மாறுதல் இயற்கையானதே. இவற்றினை நாம் எளிதில் புறக்கணித்துவிட முடியாது. காலத்திற்கு ஏற்ற மாறுதல்கள் தேவைதான்.

இதுபோன்று ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதமான கலை கள் உள்ளன. இந்தக்கலைகள் வெளியே தெரியாமல் உள்ளன. மேலும் நாடகம், வீதி நாடகம், இசை நாடகம், நாட்டிய நாடகம், பரதநாட்டியம், இசைச் சிற்பம் போன்ற பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

# 64 கலைகள்




01. இசைக்கலை
02. ஆடற் கலை
03. சிற்பக்கலை
04. சித்திரக்கலை
05. கட்டடக்கலை
06. கவிதைக்கலை
07. நாடகக்கலை
08. இசைக்கருவிகள் இசைக்கும் கலை
09. நீரலை இசைக்கலை (சலதரங்கம்)
10. பன்மொழித்திறமை
11. பல நூல்களைக் கற்றுணர்தல்
12. கவி நயம் விளக்கல்
13. கவிநடையில் பேசுதல்
14. கவிதை வினா விடை
15. கவிதையை முழுமையாக்கல்
16. ஒப்புவித்தல்
17. அழகுறப் பேசுதல்
18. பல்சொற்பொருள் திறன்
19. திறனாய்வுக் கலை
20. குண இயல்புகளை அறிதல்
21. ஒப்பனைக் கலை
22. வண்ணப்பூச்சுக்கலை
23. திலகமிடும் கலை
24. கூந்தல் முடிக்கும் கலை
25. ஆடை அணியும் கலை
26. நகை அணியும் கலை
27. தோட்டம் அமைத்தல்
28. மலரால் அழகுபடுத்தல்
29. கோலமிடுதல்
30. உருவங்களைத் தோற்றுவித்தல்
31. பொம்மைகள் செய்தல்
32. அணிகலன்களைச் செய்தல்
33. புதுப்பொருள் தோற்றுவித்தல்





34. சமையல் தொழில்
35. உணவு ஆக்குதல்
36. தையற்கலை
37. படுக்கைகள் உருவாக்கம்
38. மற்போர்க்கலை
39. நீச்சல் கலை
40. சதுரங்கம்
41. சூதாட்டம்
42. புதிர்போடுதல்
43. வேடிக்கைக் கணக்கு
44. வித்தைகள்
45. மாயவித்தை
46. இளமை காக்கும் கலை
47. ஒலி எழுப்பும் கலை
48. பிறர்போல் பேசும் கலை
49. கவரும் கலை
50. செல்ல உயிரி (பிராணி) வளர்க்கும் கலை
51. சண்டை உயிரி (பிராணி) வளர்க்கும் கலை
52. நறுமண நெய் (தைலம்) படைத்தல்
53. மனையடிக் கலை
54. தச்சு, நெசவுக் கலைகள்
55. பிரம்பு வேலைப்பாடுகள்
56. மர வேலைப்பாடுகள்
57. எந்திரப் பயிற்சி
58. மாழை (உலோக) அறிவு
59. கற்கள் பற்றி அறிதல்
60. பட்டை தீட்டுதல்
61. போர்க்கலை
62. மந்தன மொழிக்கலை
63. பயிரிடும் கலை
64. மாழைமாற்றுக் கலை (இரசவாதம்)







வெவ்வேறு வகையாகக் கூறப்படும் 64 வகைக்கலைகளிலும் தற்போதைய கலைகளாகக் கூறப்படும் வகைப்பாட்டிலும் இடம் பெற்றுள்ள வேறு சில கலைகள். எனினும் வெவ்வேறு வகையாக 64 கலைகள் கூறப்படுகின்றன.

# மருத்துவ குறிப்புகள்

இரவில் மூக்கடைப்புக்கு மின் விசிறியின் நேர் கீழே படுக்க வேண் டாம். சற்று உயரமான தலையணை பயன்படுத்தவும். மல்லாந்து படுக்கும்போது மூக்கடைப்பு அதிகமாகும். பக்கவாட்டில் படுக்கவும். காலையில் பல்தேய்க்கும்போது நாக்கு வழித்து விட்டு மூன்றுமுறை மூக்கைச் சிந்தவும். சுவாசப் பாதையைச் சுத்தப்படுத்த நமது முன் னோர் காட்டிய வழி இது.

வெண்டிக்காயை உணவில் அடிக்கடி சேர்த்து வந்தால் நரம்புகள் வலிமை பெறும். மூளையின் இயக்கத்தைச் செம்மைப்படுத்துவது டன் நல்ல ஞாபகசக்தியையும் உண்டாகும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, தாமரை இதழ், வெல்லம் சேர்த்து தண்ணீ ரில் விட்டுக் கொதிக்க வைத்து வடிகட்டி இரவில் ஒரு டம்ளர் சாப்பிடுவதால் மாரடைப்பைத் தடுக்கலாம்

வெள்ளைப் பூசனிக்காயை பூந்துருவலாக துருவி, உப்பு சேர்த்து இஞ்சி, பச்சை மிளகாய், கொத்துமல்லி, கருவேப்பிலை, கடுகு, தாளித்து தயிரில் கலந்து தயிர்ப் பச்சடியாக சாப்பிட்டால் மிகவும் ருசியாக இருக்கும். பூசணிக்காய் ரத்தக்கொதிப்பு, கொலஸ்ட்ரால் தலைசுற்றல் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும்.

கை சுளுக்கு உள்ளவர்கள் நீரில் மிளகுத் தூளும், கற்பூரத்தையும் போட்டுக் கொதிக்க வைத்து அந்தத் தண்ணீரைத் துணியில் நனைத் துச் சுளுக்கு உள்ள இடத்தின் மீது போடுங்கள் சுளுக்கு விட்டுவிடும்.

அறுகம்புல் சாறை மோருடன் குடித்தால் நீரிழிவு குறையும். உலர் திராட்சைப் பழத்தை வெது வெதுப்பான தண்ணீரில் அரை மணி நேரம் ஊறவைத்து காலையில் அருந்தினால் மாதவிடாய்க் கோளாறு கள், இதய நோய் தீரும்.

புடலங்காயின் இலைச்சாறு காலையில் குழந்தைகளுக்குத் தருவ தால் கக்குவான், இருமல் குணமாகும். மலச்சிக்கல் நீங்கும். புடலங் காய் சமைத்து உண்பதால் தேவையில்லாத உடற்பருமன் குறையும் வாய்ப்புகள் அதிகரிக்கும்.

கரட் சாறும் சிறிது தேனும் பருகி வந்தால் கர்ப்பிணிப் பெண் களுக்கு வாந்தி மட்டுப்படும். எலுமிச்சை பழச் சாற்றில் ரசம் செய்து சாப்பிட்டால் உஷ்ணம் குறையும். கடுகை அரைத்து வலியுள்ள பகுதியில் போட்டால் வலி குறைந்துவிடும்.

நுரையீரல் சம்பந்தமான நோய்கள் குணமாக வெற்றிலைச் சாற்றில் இஞ்சி சாற்றை சேர்த்து குடித்து வந்தால் நல்லபலன் கிடைக்கும். எள், எள்ளில் இருந்து வரும் நல்லெண்ணெய்யைக் கொடுக்க உடல் இளைந்துக் காணப்படுபவர்கள் தேறி, உடல் எடை அதிகரிக்கும்.

நீரிழிவு பிரச்னை உள்ளவர்கள் அனைத்து வகை கீரைகள், காய்கள், வாழைத்தண்டு சாப்பிடலாம். வெந்தயம் மிக நல்லது.

இரண்டு, மூன்று வெண்டைக் காய்களின் காம்பு மற்றும் அடிப் பகுதியை நீக்கி, நெடுக்குவாட்டில் கீறல்களை போட்டுவிட்டு இரவு முழுக்க டம்ளர் நீரில் மூடி வைக்க வேண்டும். காலை உணவுக்கு முன் இந்த நீரை மட்டும் அருந்திவர, இரண்டே வாரத்தில் சர்க்கரை குறையும். இது மேற்கத்திய நாடுகளின் எளிய வைத்தியம்.

வயிற்றுப்போக்கு விடுபட உடனடி உபாயம் - வெறும் கொய்யா இலைகளை மெல்வதுதான்.

நீங்கள், தினமும் ஐந்து விதமான பழங்களையும், சில காய்கறி களையும் உணவாக எடுத்துக் கொள்பவரா..? ஆம் என்றால் - ஆரோக்கியமும் அழகும் எப்போதும் உங்க பக்கம்தான்..!

கர்ப்பிணிகளின் உடலுக்கு இயற்கையான குளிர்ச்சியைத் தருகிறது வாழைப்பழம். உடல் காரணங்களால் மட்டுமல்ல - உணர்ச்சி வசப்படுவதாலும் உடலைப் பாதிக்கும் சூட்டை வாழைப்பழம் நீக்குகிறது. தாய்லாந்தில் தாயாகப் போகிறவரின் தினசரி உணவில் வாழை ரெசிபிக்கள் விதவிதமாக இருக்கும்.

பூண்டு சாப்பிட்டீர்களென்றால் - உங்கள் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி வெகுவாக அதிகரிக்கும். வெள்ளை அணுக்கள் அதிகம் உற் பத்தியாவதோடு, கேன்சர் செல்கள் உருவாகாமலும் தடுக்கும்.

சிவப்பணு உற்பத்திக்கு புடலங்காய், பீட்ரூட், முருங்கைக்கீரை, அவரை, பச்சைநிறக் காய்கள், உளுந்து, துவரை, கம்பு, சோளம், கேழ்வரகு, பசலைக்கீரை போன்றவற்றை அடிக்கடி சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சமையலுக்குக் கைக்குத்தல் அரிசியைப் பயன்படுத்துவது மிக மிக நல்லது. கைக்குத்தல் அரிசியில் நார்ச் சத்துக்கள் நிறைந்துள்ளன.

பப்பாளிப் பழங்கள் மிகவும் சத்து மிகுந்தவை. வாரம் ஒருமுறை பப்பாளிப் பழம் வாங்கிச் சாப்பிடுங்கள். கண்களுக்கும் நல்லது.

இயற்கைச் சூழலான இடங்களுக்குச் செல்ல நேர்ந்தால் - கொஞ்ச நேரம் ஆழமாக மூச்சு விடுங்கள். நுரையீரலுக்கு அது மிகவும் பயனளிக்கும்.

எந்தவித நோய் தாக்கியிருந்தாலும் முதலில் செய்ய வேண்டியது, கவலையைத் தூக்கி எறிவதுதான். அதுதான் முதலுதவிக்கும் முந்தைய சிகிச்சை.

சீனியை உங்கள் வாழ்க்கையிலிருந்து ஒழிக்க முடிந்தால், உடலின் எதிர்ப்புச் சக்தியை எளிதில் வலுப்படுத்தலாம்.

ஒரே இடத்தில் உட்கார்ந்திராமல் அவ்வப்போது எழுந்து நடக்கவேண்டும். அதிகபட்சம் 45 நிமிடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக அமர வேண்டாம். லிஃப்ட் பயன்படுத்துவதை கூடுமானவரை தவிர்க்கவும்.

கம்ப்யூட்டரில் வேலை பார்ப்பவர்கள் 20-20-20 பயிற்சியைப் பழக வேண்டும். இருபது நிமிடங்களுக்கு ஒருமுறை, இருபது அடி தொலைவிலுள்ள பொருளை, இருபது விநாடிகள் பார்த்து கண்ணை இலகுவாக்குவதுதான் பயிற்சி. அவ்வப்போது கண்களைக் கழுவுவதும் அவற்றுக்குப் புத்துணர்ச்சியைத் தரும்.

பூண்டு சாப்பிட்டீர்களென்றால் - உங்கள் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி வெகுவாக அதிகரிக்கும். வெள்ளை அணுக்கள் அதிகம் உற்பத்தியாவதோடு, கேன்சர் செல்கள் உருவாகாமலும் தடுக்கும்.

மன அழுத்தம் இதயத்தின் எதிரி. அதை விட்டுத் தள்ளுங்கள்.



# உலகின் சிறந்த கல்விமுறை எந்த நாட்டுடையது தெரியுமா?

கல்வியின் எல்லை மதிப்பெண்தான் என்றாகிவிட்ட இன்றைய சூழலில் கல்வி எனும் விஷயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. **பின்லாந்து ஓர் உதாரணம்!**

பின்லாந்தில் ஒரு குழந்தை பள்ளியில் சேரும் வயது என்ன தெரியுமா? ஏழு. ஆம் ஏழுவயதில்தான் கல்வி கற்கவே தொடங்குகிறார்கள். அதுவரை குழந்தைகள், குழந்தைகளாகவே இருக்கின்றனர். கல்வி ஓர் எளிமையான விளையாட்டு போல அவர்களுக்குள் புகுத்தப்படுகிறது.

முக்கியமாக நாம் பின்பற்றும் மனப்பாட முறை கல்வி கிடையாது. முதல் ஆறு வருடங்களுக்கு கற்கும் திறமையை அளவிடுதல் இல்லை, தேர்வு இல்லை. அதுவும் தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி அளவில் வீட்டுப்பாடம் என்பதுகூட அறவே கிடையாது.

இவ்வாறு ஒன்பது வருடங்கள் வரை பள்ளிப்படிப்பைத் தொடர்கின்றனர். பதினாறு வயதாகும்போதுதான் தேர்வு என்ற ஒன்றையே எதிர் கொள்கின்றனர். அதன் பின்னர் தனக்கான துறையை தேர்ந்தெடுத்து பயிலும் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

மாணவர்கள் அறிவானவர்கள் திறமை குறைந்தவர்கள் என தகுதி பிரிக்கப்படுவதில்லை. அனைவருக்கும் ஒரே கல்வி முறை கல்வியறைதான். கற்கும் திறன் குறைந்த மாணவர்களுக்கு அதை மேம்படுத்தும் விதத்தில் சற்று அதிக உதவிகள் மட்டும் செய்து தரப்படும். முதல் ஆறு வருடங்களுக்கு ஒரே ஆசிரியர். அந்தக் குழந்தைகளின் பிரச்னைகளைப் புரிந்து கொண்டு, நெறிப்படுத்தி, கல்வியைப் புகுத்தி வழி நடத்துதல் அவரது கடமை!

அதிகபட்சம் ஒரு நாளில் நான்கு வகுப்புகள் மட்டுமே நடைபெறும். அதிலும் வகுப்புகளுக்கிடையே ஒரு மணி நேரம் இடைவெளி விடப்படும். ஆசிரியர்கள் வகுப்பறைகளில் செலவிடும் நேரம் எவ்வளவு தெரியுமா? வெறும் நாலு மணி நேரம்தான்.

வகுப்பறையில் அதிகபட்சம் பதினாறு மாணவர்களே இருப்பர். வெறுமனே சொல்லித்தருதலைவிட செயல்முறைக் கல்வியே அதிகம்.

எனவே, நிஜ உலகில் நாம் செய்யும் சமைத்தல், சுத்தம் செய்தல் முதற்கொண்டு எல்லா அடிப்படை வேலைகளையும் கற்றுத் தெளிகின்றனர்.

படைப்பாற்றலுக்கே அதிகமுக்கியத்துவம். கற்றுக்கொள்வதை தனித்திறமையுடன் மேம்படுத்த போதிய ஊக்குவிப்பு ஆசிரியர்களால் வழங்கப்படும். மாணவர்களுக்குள் போட்டியை உண்டாக்காமல், குழுவாக இணைந்து வெற்றிகாணும் வழிமுறைகளே போதிக்கப்படுகின்றன.

முதுநிலைப் பட்டம் பெற்றவர்கள் மட்டுமே ஆசிரியராக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களில் சிறந்து விளங்கும் பத்து சதவிகிதத்தினரே ஆசிரியராக முடியும். ஆசிரியர்கள் தங்களது தகுதியை உயர்த்திக்கொண்டே இருத்தல் அவசியம். இதனால் அவர்களது தகுதி மேம்பாட்டுக்காக வாரத்தில் இரண்டு மணி நேரம் செலவிடுகிறார்கள்.

அனைத்துப் பள்ளிகளுக்கும் அரசால் நிதியுதவி செய்யப்படுகின்றன. ஆசிரியர்களுக்கு தேவையான பயிற்சிகள் அரசினால் நிதியுதவி செய்யப்பட்டு அளிக்கப்படுகின்றன. மாணவர்களுக்கான உணவு, மருத்துவ வசதி போன்றவை முற்றிலும் அரசாலேயே அளிக்கப்படுகின்றன.

அரசின் பாடத்திட்டத்தில் வழிமுறைகள் மட்டுமே உண்டு. அதற்கான பயிற்சித் திட்டத்தை அந்தந்த ஆசிரியரே அவரது விருப்பப்படி வகுத்துக் கொள்ள வேண்டும். அவர் தம் மாணவர்களின் வளர்ச்சிக்கு அவர்களே பொறுப்பு. நம்பிக்கையே இந்த எளிமையான வழிமுறையை கட்டமைத்து வழிநடத்துகிறது!

யாருக்கும் யார் மீதும் சந்தேகம் இல்லை. இது நடக்குமா, ஒழுங்காக செய்கிறார்களா என சந்தேகக் கண்கொண்டு பார்க்காமல், அனைவரும் தன்னிச்சையாக வழிமுறைகளை பின்பற்றுகிறார்கள்.

மாணவன், தன் ஆசிரியர் தன்னை நல்ல முறையில் வழிநடத்துவார் என நம்புவது போல, மாணவன் முழு அர்ப்பணிப்போடு தன்னைத் தருவான் என ஆசிரியரும் நம்புகிறார். அதற்கேற்ற சூழ்நிலையும் சுதந்திரமும் அளிக்கப்படுகிறது. சமூகம், 'இந்த அரசு நல்ல கல்வியை தர அடிப்படை வசதிகளை செய்து தரும்' என நம்புகிறது.

ஐரோப்பியக் கண்டத்தில் உள்ள பின்லாந்தின் மக்கள் தொகை ஏறக்குறைய 55 லட்சம்தான். 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை ஸ்வீடனின் ஒரு பகுதியாகத்தான் இருந்தது பின்லாந்து. அதன் பின்னர், சிறிதுகாலம் சோவியத் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. 1917-ல் விடுதலை அடைந்தது. முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர்கள், உள்நாட்டுக் கலகங்கள் என்று பல்வேறு பாதிப்புகளைச் சந்தித்த நாடு அது. 1950 வரை ஒரு விவசாய நாடாக மட்டுமே இருந்த பின்லாந்து, இன்று அதிக அளவு தனிநபர் வருமானம் உடைய நாடுகளில் ஒன்றாகவும், பொருளாதாரத்தில் மிகவும் முன்னேறிய நாடுகளில் ஒன்றாகவும் உள்ளது. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அளவுகோல்களாகக் கருதப்படும் கல்வி, பொருளாதாரம், வாழ்க்கைத்தரம், குடிமக்கள் உரிமைகளைப் பாதுகாத்தல், மனிதவள மேம்பாடு ஆகிய வற்றில் தலைசிறந்து விளங்குகிறது இந்நாடு. வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமையைத் தந்த முதல் நாடான பின்லாந்து, லஞ்சம் இல்லாத நாடுகளில் மூன்றாவது இடத்தில் இருக்கிறது.

**ஆசிரியர்களின் பங்களிப்பு**

பின்லாந்தின் 60 ஆண்டு காலப் பிரம்மாண்ட வளர்ச்சிக்கு முக்கியக் காரணம், ஆட்சியாளர்களும் மக்களும் கல்வியில் செலுத்திய அக்கறையும் ஈடுபாடும்தான். பொருளாதார மறுமலர்ச்சி வேண்டு மெனில், சரியான கல்விமுறைதான் சிறந்த கருவி என்று 1963ல் அந்நாட்டு நாடாளுமன்றம் தீர்மானித்தது. பல்வேறு கருத்துக் கேட்புக் கூட்டங்கள், விவாதங்களுக்குப் பிறகு நாடு முழுவதும் முழுமையான பொதுக் கல்வித்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக பல நூறு ஆசிரியர்களைக் கலந்தாலோ சித்து உருவானது அத்திட்டம்.

8 மாதம் முதல் 5 வயது வரையிலான குழந்தைகள் பகல் நேரங் களில் அந்தந்த நகராட்சிகளின் பாதுகாப்பு மையங்களில் பராமரிக் கப்படுகின்றன. இம்மையங்களில், மற்ற குழந்தைகளுடன் பழகும் குழந்தைகள் பிறருடன் பழகும் தன்மை, மற்றவர்களின் குணநலன் கள், தேவைகளை அறிந்துகொள்ளுதல் என்று பல்வேறு விஷயங் களை இயல்பாகவே கற்றுக்கொள்கின்றன. இந்த ஐந்து ஆண்டு காலப் பயிற்சி, அக்குழந்தை பின்னர் சுயமாகக் கல்வி கற்க உறுதி செய்கிறது. இதன் மூலம் பிரகாசமான எதிர்காலம் உறுதிப் படுத்தப்படுகிறது. பின்னர், ஆறு வயதிலிருந்து ஏழு வயது வரை,

ஒரு வருடம் மட்டுமே மழலையர் பள்ளி முறை நடைபெறுகிறது. அங்கேயும் வாசித்தல், கணிதம் போன்றவற்றுக்குப் பதிலாக இயற்கை, விலங்குகள், வாழ்க்கைச் சக்கரம் போன்றவைதான் பாடங்களாக உள்ளன. ஏழு வயது வரை குழந்தைகளுக்குக் கட்டாயக்கல்வி கிடையாது என்பதுதான் மிகமுக்கியமான விஷயம்.

ஏழு வயதிலிருந்து, பதினைந்து வயது வரை ஒன்பது ஆண்டுகள் ஆரம்பக்கல்வி கட்டாயமாகிறது. தனியார் பள்ளிகள் மிகக் குறைவு. ஒரு வகுப்பில் 20 - 25 மாணவர்களே இருப்பார்கள். தாய்மொழி தவிர கூடுதலாக மற்றொரு மொழியையும் கற்கலாம். கலை, இசை, சமையல், தச்சு வேலை, உலோக வேலை மற்றும் நெசவு போன்றவையும் கற்பிக்கப்படுகின்றன.

வகுப்பறை மற்றும் பள்ளியில் நல்ல இதமான, எந்தவித அழுத்தமும் அற்ற மகிழ்ச்சியான சூழலே நிலவுகிறது. குழந்தைகள் புத்தகம் வாசிக்கும் பழக்கம் மிகவும் உற்சாகப்படுத்தப்படுகிறது. உலகிலேயே குழந்தைகளுக்கான புத்தகங்களை அதிகம் பதிப்பிக்கிற நாடு பின்லாந்துதான். மாணவர்களுக்குக் குறைவான 'ஹோம் வொர்க்' தான் தரப்படுகிறது. நம் ஊரைப் போல மதிப்பெண் அடிப்படையில் மற்ற குழந்தைகள் ஒப்பிடப்படுவதில்லை. தரப்படுத்தப்படும் தேர்வு முறை இல்லை. ஆரம்பக் கல்வி என்பது வெறும் ஏட்டுக் கல்வியில் கிடைக்கும் வெற்றி, வெற்றி அல்ல என்று பின்லாந்து கல்வியாளர்கள் கூறுகின்றனர். மாணவர்கள் தங்கள் திறன்களை உணர்ந்துகொள்வது, வாழ்க்கை பற்றிய புரிதலை இயல்பாகவே கற்றுக்கொள்வது என்று மிக முக்கியமான விஷயங்களை அந்நாட்டின் ஆரம்பக் கல்வி தருகிறது.

**புண்ணியம் செய்த ஆசிரியர்கள்**

இத்தகைய கல்வி முறையை நல்ல முறையில் நடைமுறைப்படுத்தத் தரமான ஆசிரியர்கள் தேவை. பின்லாந்தில் ஆசிரியர் ஆவதற்குக் குறைந்தபட்சம் பட்டமேற்படிப்பு படித்திருக்க வேண்டும். ஆசிரியர் தேர்வுமுறையும் மிகக் கடினமான ஒன்று. பணிபுரியும் ஆசிரியர்களுக்குத் தொடர் பயிற்சியும், மதிப்பீடும் கட்டாயம். அதேநேரத்தில் ஆசிரியர்களுக்கு அதிக ஊதியமும், உயர்ந்த சமூக அந்தஸ்தும் கொடுக்கப்படுகிறது.

கட்டாய ஆரம்பக் கல்விக்குப் பிறகு 16 வயதில் மூன்று அல்லது

நான்கு வருடங்கள் மேல்நிலைக் கல்வி வழங்கப்படுகிறது. இந்நிலையில், மாணவர்கள் தொழிற் கல்வி அல்லது பொதுக்கல்வி என ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்யலாம். இதன் பிறகு, கல்லூரி களிலும் பல்கலைக்கழகங்களிலும் உயர் கல்வி வழங்கப்படுகிறது. தகுதியின் அடிப்படையில் மட்டுமே மாணவர்கள் சேர்க்கப்படுகின்ற னர். பள்ளியில் மாணவர்களுக்குக் கல்வி, உணவு, மருத்துவம், சுற்றுலா போன்ற அனைத்துச் செலவுகளையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது. ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள சூழலுக்கேற்பப் பாடத்திட்டத்தையும், கற்பிக்கும் முறையையும் தீர்மானிக்கும் சுதந் திரம் ஆசிரியர்களுக்கு உண்டு. குழந்தைகளின் படைப்புத்திறன், சிந்தனைசக்தி போன்றவை வளர்க்கப்படுகின்றன.

சர்வதேச மாணவர் மதிப்பீட்டுத் திட்டம் எனும் அமைப்பு ஒவ்வொரு ஆண்டும் உலக நாடுகளைச் சேர்ந்த பதினைந்து வயது அடைந்த மாணவர்களுக்குத் தேர்வு நடத்தி, உலகத் தர வரிசைப் பட்டியலை வெளியிடுகிறது. வாசித்தல், கணிதம், அறிவியல், பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் மற்றும் நிதி பற்றிய கல்வியறிவு போன்றவற்றை அடிப்படையாகக்கொண்ட தேர்வு இது. இந்தப் பட்டியலில் பத்தாண்டு களுக்கு மேலாக முன்னணியில் இருப்பது பின்லாந்துதான்.

மனித மூலதன அறிக்கையை உலகப் பொருளாதார மன்றம் சமீபத்தில் வெளியிட்டது. 214 நாடுகளின் கல்வித்தரம் மற்றும் வேலைத் திறன் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள தர வரிசைப் பட்டியலில் பின்லாந்துதான் முதலிடத்தில் உள்ளது. நாம் பலவீனமாக இருக்கும் விஷயங்களில் மற்ற நாடுகளைப் பார்த்து மாற்றங்கள் செய்வதில் தவறில்லை. கல்வியின் தரத்தை உயர்த்துவது குறித்த ஆரோக்கியமான விவாதங்கள் அவசியம். பின்லாந்து போன்ற நாடு களில் பின்பற்றப்படும் நடைமுறைகளை எமது மண்ணுக்கு ஏற்ற வாறு கொண்டுவருவது குறித்த ஆய்வுகளுக்கு அரசு ஊக்கம் தர வேண்டும். நம் குழந்தைகளுக்குச் சிறப்பான எதிர்காலத்தை உரு வாக்கித்தர அனைவரும் கைகோர்க்க வேண்டிய தருணம் இது.



# திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயில்

திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ளது. திருஅண்ணா மலையார் கோயில் என்றும் திருவண்ணாமலை அருணாசலேஸ் வரர் கோயில் என்றும் அறியப்படும் தலம் சிவபெருமானின் பஞ்சபூத தலங்களில் அக்னித் தலமாகும். இத்தலத்தின் மூலவர் அருணாசலேசுவரர் என்றும், அம்பிகை உண்ணாமுலையாள் என்றும் அழைக்கப்படுகிறார்.

பிரம்மாவிற்கும், திருமாலுக்கும் தங்களுக்குள் யார் பெரியவர் என வாக்குவாதம் எழ, இடையில் நெருப்பு பிழம்பு தோன்ற நம்மில் யார் இதன் அடியையும், முடியையும் கண்டறிபவரே நம்மில் பெரி யவரென உரைத்தனர். அதன் அடியை காண திருமால் வராக (பன்றி) வடிவெடுத்து நிலத்தினை குடைந்து சென்று பல ஆண்டுகள் பயணம் செய்தும் அடியை காண இயலாமல் திருமால் திரும்ப, அன்னவடிவமெடுத்து முடியை காணச்சென்ற பிரம்மர், வானிலிருந்து கீழே வரும் தாழம்பூவிடம் இது யாதென வினவ அதற்கு இது சிவபெருமானெனவும், நான் சிவனாரின் தலையிலிருந்து பல ஆண்டுகளாக விழுந்து கொண்டிருக்கிறேன் என உரைத்த தாழம்பூவிடம் நீ திருமாலிடம், நான் இந்த நெருப்புபிழம்பாக



நின்ற சிவனின் முடியை கண்டுவிட்டேன் எனக்கூறும்படி கேட்டார் பிரம்மர். தன்னால் அடியை கண்டறிந்தளக்க முடியாததை ஒப்புக் கொண்ட திருமாலிடம், பிரம்மன் நான் பகிரதனுக்காக ஆகாய கங்கையை தனது செஞ்சடையில்தாங்கி சிவகங்கை என பெயர் மாற்றிய சிவபெருமானின் முடியை கண்டுவிட்டதாகவும், அதற்கு இந்த தாழம்பூவே சாட்சி என உரைத்தும் நீ எனக்கு ஒரு குழந் தைக்கு ஒப்பானவனெனக் கூறி எள்ளிநகையாடியதால், ருத்திரமுற்ற சிவன், பத்மகற்பத்தில் பிரம்மன் திருமாலின் உந்தி கமலத்தில் தோன்றுவாரெனவும், தாழம்பூ சிவபூசையில் இனி பயன்படா யெனவும் உரைத்தார். தாழம்பூ தன்னிடம் மன்னிப்பு கேட்டதற் கிணங்கிய சிவன் நான் புவியில் எனது பக்தைக்காக குழந்தை யாக அவதரித்த உத்திர கோசமங்கையெனும் திருத்தலத்தில் மட்டும் பயன்படுவாயெனவும் அருளினார். திருமாலால் தன்னை அளக்க இயலாததால் திருமாலை சிறியவரென உரைப்பார்களெனவும், பிரம்மா கேட்ட மன்னிப்பினால் அவருக்கு வழிபாடு நிகழவேண்டி சிவபெருமான் சிவலிங்கத்தின் அடிப்பாகத்தில் பிரம்மர், நடுப்பாகத் தில் திருமால், மேல்பாகத்தில் சிவனும் நின்று சிவலிங்கமாக தோன் றினர். வேதங்கள் புகழும் சிவலிங்கம் தோன்றிய நாளே மகா சிவராத்திரி நாளாகும்.

தன்னை நோக்கி தவமியற்றிய பார்வதியை தன்னுடைய இடப் பாகத்தினிலமர்த்தி அர்த்தநாரீஸ்வரராய் (கருவறையின் பின்புறம் ஐம்பொன் சிலை உள்ளது) நின்ற பெருமைக்கு உரிய தலம் இத் தலம் ஆகும். "திருஅண்ணாமலையை நினைக்க முக்தி" அவ்வளவு சிறப்பு வாய்ந்த தலம்.

இத்தலத்தினை அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகியோர் தேவாரம் பதிகங்களை பாடியுள்ளார்கள். மூலவர் சிவ பெருமான் என்றாலும், இங்குள்ள முருகன் மீது அருணகிரி நாதர் பாடல்களைப் பாடியுள்ளார். இத்தலத்தில் உள்ள மலை எல்லா யுகங்களிலும் அழியாமல் இருப்பதாகவும், இம்மலையானது சிவ பெருமானே என்றும் சைவர்கள் நம்புகிறார்கள். இதனால் இம் மலையை வலம்வருதலை கடைபிடிக்கின்றனர். இவ்வாறு மலையை வலம் வருதல் கிரிவலம் என்று அழைக்கப்படுகிறது.

பல்வேறு நகரங்களிலிருந்தும், ஊர்களிலிருந்தும் எண்ணற்ற சித்தர்கள் இந்நகருக்கு வந்து வாழ்ந்து சமாதியடைந்துள்ளார்கள்.

அவர்களில் ரமணர், சேசாத்திரி சாமிகள், விசிறி சாமிகள், குரு நமச்சிவாயர், குகை நமச்சிவாயர் போன்றோர் குறிப்பிடத்தக் கவர்கள். இவர்களின் சமாதிகள் கிரிவலப் பாதையில் அமைந் துள்ளன.

முக்தி தரும் தலங்களில் திருவண்ணாமலை நினைத்தாலே முக்திதரும் என்பது சைவர்களின் நம்பிக்கையாகும்.

◆ திருவண்ணாமலை -

◆ அருணாச்சலம் -

◆ அண்ணாமலை - அண்ணா என்ற சொல்லுக்கு நெருங்க இயலாதது என்று பொருளாகும். பிரம்மாவினாலும் திருமாலினா லும் சிவபெருமானின் அடியையும், முடியையும் நெருங்க இயலாத தால் இம்மலையை அண்ணாமலை என்று அழைக்கின்றனர். திருவண்ணாமலையிலுள்ள மலையானது 260 கோடி ஆண்டுகள் பழமையானது என டொக்டர் பீர்பால் சகானி என்ற விஞ்ஞானி தெரிவித்துள்ளார். சைவர்களின் நம்பிக்கைப் படி இம்மலையானது கிருத யுகத்தில் நெருப்பு மலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபரயுகத்தில் தங்க மலையாகவும், தற்போது நடைபெறும் கலியுகத்தில் கல் மலையாகவும் இருக்கிறது.

பால் பிரண்டன் எனும் ஆய்வாளார் மெசேஜ் பிரம் அருணாச்சலா எனும் நூலில் "லெமூரியா கண்டத்தின் எஞ்சிய பகுதி திருவண் ணாமலை" எனக் கூறியுள்ளார்.

**மலை வலம்**

திருவண்ணாமலையில் மலையே சிவபெருமானாகக் கருதப்படுகி றது. எனவே கோயிலில் இறைவனை வலம் வருதலைப் போல மலையை வலம் வரும் வழமை இங்குள்ளது. மலையைச் சுற்றி வர இரு வழிகள் உள்ளன. மலையை ஒட்டிச் செல்லும் வழியில் பாறைகள், முட்கள் மிகுந்த கடின பாதையாக அமைந்துள்ளது.

மலையைச் சுற்றியுள்ள பாதை ஜடாவர்ம விக்கிரம பாண்டியனால் கி.பி 1240ல் திருப்பணி செய்யப்பட்டது.

பொதுவாக மக்கள் வலம் வரும் பாதையில் இந்திர லிங்கம், அக்னி லிங்கம், யமலிங்கம், நிருதி லிங்கம், வாயு லிங்கம், குபேர லிங்கம் மற்றும் ஈசான்ய லிங்கம் என எட்டு லிங்கங்களும், ரமணமகரிசி,

சேசாத்திரி சுவாமிகள், விசிறி சாமியார் போன்றோர் சமாதிகள் அமைந்துள்ளன.

எல்லா நாட்களிலும் மலையை மக்கள் வலம் வருகிறார்கள் என் றாலும் முழுநிலவு நாளில் வலம்வருதல் சிறப்பாக கருதப்படுகிறது.

இம்மலையானது யுகங்களின் அழிவுகளிலும் அழியாமல் இருப் பதாக கருதப்படுகிறது. எனவே கிருதா யுகத்தில் அக்னி மலையாக வும், திரேதாயுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபர யுகத்தில் பொன் மலையாகவும், கலியுகத்தில் கல் மலையாகவும் மாறியிருப் பதாக நம்பப்படுகிறது.

எட்டு திக்கிலும் அஷ்டலிங்கங்களைக் கொண்ட எண்கோண அமைப்பில் திருவண்ணாமலை நகரம் காணப்படுகிறது. அஷ்ட லிங்கங்கள் எனப்படுபவை இந்திர லிங்கம், அக்னி லிங்கம், யம லிங்கம், நிருதி லிங்கம், வாயு லிங்கம், குபேர லிங்கம் மற்றும் ஈசான்ய லிங்கம். தேவாரத்தில் புகழப்படும் ஆதி அண்ணாமலை திருக்கோயில் மலை வலப்பாதையில்தான் அமைந்துள்ளது. இந்த மலையின் சுற்றளவு 14 கிலோமீட்டர் உள்ளது. இம்மலையில் இன் றும் பல சித்தர்கள் வாழ்ந்து வருவதாக வரலாறு.

மலையை வலம் வரும்போது மனிதர்கள் இடப்பக்கம் நடக்க வேண்டும், ஏனென்றால் மலையை ஒட்டியுள்ள வலப்பக்கம் சித்தர் களும், யோகிகளும், தேவர்களும் வலம் வருவதாக ஐதீகம். கிரிவலம் செல்லும்போது பஞ்சாச்சர நாமத்தையோ (நமசிவாய, சிவாயநம) அல்லது திருமுறைகளையோ (தேவாரம், திருவாசகம்...) உச்சரிக்க வேண்டும், அதை தவிர்த்து வேறெதையும் பேசக்கூடாது. கிரிவலம் செல்லும்போது நிதானமாக நடக்க வேண்டும், அவசரமாகவோ, வேகமாகவோ செல்லக் கூடாது.

இது 24 ஏக்கர் பரப்பளவு 6 பிரகாரங்கள் 9 ராஜகோபுரங்கள் கொண்ட கோயிலாகும். இக்கோயில் மலையடிவாரத்தில் இருப்பது சிறப்பு. இச்சிவாலயத்தில் 142 சன்னதிகள், 22 பிள்ளையார்கள், 306 மண்டபங்கள், 1000 தூண்களைக் கொண்ட ஆயிரங்கால் மண்டபம், அதன் அருகே பாதள லிங்கம், 43 செப்புச் சிலைகள், கல்யாண மண்பம், அண்ணாமலையார் பாத மண்டபம் ஆகி யவை அமைந்துள்ளன.

அண்ணாமலையார் கோயிலில் ஒன்பது கோபுரங்கள் உள்ளன. அவைகளில் ராஜா கோபுரம், பேய் கோபுரம், அம்மணியம்மாள் கோபுரம், திருமஞ்சன கோபுரம், கிளி கோபுரம், வல்லான மகாராஜா கோபுரம் ஆகியவை குறிப்பிடத் தக்கவையாகும். தெற்கு கட்டை கோபுரம், வடக்கு கட்டை கோபுரம், மேற்கு கட்டை கோபுரம் ஆகிய கோபுரங்கள் உள்ளன.

இச்சிவாலயத்தில் 306 மண்டபங்கள் உள்ளன. அவற்றில் ஆயிரம் கால் மண்டபம், தீப தரிசன மண்டபம், 16 கால் மண்டபம், புரவி மண்டபம், ஏழாம் திருநாள் மண்டபம் ஆகியவை உள்ளன.

சிவபெருமான் இத்தலத்தில் சுயம்பு மூர்த்தியாக உள்ளார். இத் தலத்தில் உள்ள மலையே சிவலிங்கம் என்பது நம்பிக்கை. அம்மன் உண்ணாமலையம்மை ஆவார். முருகன், விநாயகர், அர்த்த நாரீசுவரர், பெருமாள், பைரவர், பிரம்மலிங்கம், பாதாளலிங்கம் ஆகிய சன்னதிகள் உள்ளன.

சிவகங்கை தீர்த்தம் பிரம்ம தீர்த்தம் என இரு தீர்த்தங்கள் உள்ளன. இக்கோவிலில் ஆறுகால பூசை தினமும் நடைபெறுகிறது.

குழந்தையில்லாதவர் திருவண்ணாமலையை கிரிவலம் வந்து தங்களுக்கு குழந்தை பிறக்க அண்ணாமலையை வேண்டு கின்றார்கள். அவ்வாறு குழந்தை பிறந்தால் கரும்புத் தொட்டிலினை இட்டு மீண்டும் கிரிவலம் வந்து வேண்டிக் கொள்கின்றார்கள். இவ்வாறு கரும்புத் தொட்டியலிடுவது இக்கோவிலின் முக்கிய நேர்த் திக் கடன்களில் ஒன்றாகும்.

அண்ணாமலையார் கோயிலில் ஆண்டு தோறும் நான்கு பிரம் மோற்சவங்கள் நடைபெறுகின்றன.

ஆனி மாத பிரம்மோற்சவம் என்பது தட்சணாயன பிரம்மோற்சவம் என்று அழைக்கப்படுகிறது. கொடியேற்றத்துடன் தொடங்கும் இந்த விழா, அண்ணாமலையார், உண்ணாமலை அம்மனுக்கு சிறப்பு அபிசேக ஆராதனையும் பராசக்தியம்மன், விநாயகர், சந்திரசேகரர் சாமிகளுக்கு பூசைகள் செய்யப்படுகின்றன.

விநாயகர் மற்றும் சின்னநாயகர் அம்மன், சந்திரசேகரர் வீதியுலா, ஆயிரங்கால் மண்டபத்தில் நடராஜர் எழுந்தருளுதல், ஆனி திரு மஞ்சனம் ஆகியவை நடைபெறுகின்றன.

கார்த்திகை தீப நாளை ஒட்டி கார்த்திகை தீப பிரம்மோற்சவ திருவிழா அண்ணாமலையார் கோவிலில் நடைபெறுகிறது. இதில் பத்து நாட்கள் உற்றவர்களின் ஊர்வலங்களும், மூன்று நாள் தெப்ப திருவிழாவும் அதனையடுத்து சண்டிகேசுவர் உற்சவமும் நடைபெறுகிறது.

சிவன் கார்த்திகை மாத கிருத்திகை நட்சத்திரத்தில், திருமால், பிரம்மன் இருவருக்கும் அக்னி வடிவமாக காட்சி தந்தார். இந் நாளிலேயே தீபத்திருநாள் கொண்டாடப்படுகிறது. அன்று அதி காலையில் அண்ணாமலையார் சன்னதியில் ஒரு தீபம் ஏற்றி, அதன் மூலம் மேலும் ஐந்து தீபங்கள் ஏற்றி பூசைசெய்வர். பின்பு அந்த தீபங்களை ஒன்றாக்கி அண்ணாமலையார் அருகில் வைத்து விடுவர். இதனை, 'ஏகன் அநேகனாகி அநேகன் ஏகனாகுதல்' தத்துவம் என்கிறார்கள். பரம்பொருளான சிவனே, பல வடிவங் களாக அருளுகிறார் என்பதே இந்நிகழ்ச்சியின் உட்கருத்தாகும்.

மகா தீபம் கார்த்திகை தீபதிருவிழா நாளின் மாலையில் அண்ணா மலை மலையின் மீது ஏற்றப்படுகிறது. இம்மலை 2,668 அடி உயரமானதாகும்.

மாலை நேரத்தில் பஞ்சமூர்த்திகள் தீப மண்டபத்தில் எழுந்தருளு கின்றனர். அவர்களைத் தொடர்ந்து வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே காட்சிதருகின்ற அர்த்தநாரீசுவரர் உற்வச கோலம் தீபமண்டபத்திற்கு எடுத்து வரப்படுகிறது. அவர் முன்பு அகண்ட தீபம் ஏற்றப்படுகிறது. இத்தீபம் ஏற்றப்படுகின்ற அதே நேரத்தில், மலையில் மகாதீபம் ஏற்றப்படுகிறது. இந்த மகாதீபத்தினை பக்தர் கள் மலையின் மீது ஏறிப் பார்க்கின்றனர்.

திருமுறைப் பாடல் பெற்ற 275 திருத்தலங்கள் (சிவன் கோயில்கள்) திருமுறைத்தலங்கள் எனப் போற்றப்படுகின்றன. இவற்றில் 22 திருத்தலங்கள் நடுநாட்டில் (தமிழ்நாட்டின் ஒரு பகுதி) அமைந்துள் ளன. இந்த 22 தலங்களில் மிகவும் சிறப்புடையது திருவண்ணா மலை ஆகும்.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலானோர் அண்ணாமலையாரை வந்து தரிசித்து பதிகங்கள் பாடியுள்ளார்கள். மாணிக்கவாசகர் திருவண்ணாமலைக்கு வந்து பலகாலம் தங்கி யிருந்து (வைணவத்தில் மார்கழி மாதத்திற்கு திருப்பாவை

இருப்பது போல) சைவத்திற்கு மார்கழியில் "திருவெம்பாவை" (20) பாடல்களையும், திருவம்மானை பதிகங்களையும் இயற்றி உள்ளார். கிரிவலப்பாதையில் அடியண்ணாமலை என்னும் இடத்தில் மாணிக்கவாசகருக்கு ஒரு கோயில் இருப்பதை இன்றும் காணலாம்.

அருணகிரிநாதர் திருவண்ணாமலையில் பிறந்தவர். இங்குள்ள இறைவன் முருகன் மீது பாடல்களைப் பாடியுள்ளார். அவர் கோபுரத்தில் கிளியாக மாறிப் பாடியமையால் அக்கோபுரத்தினை கிளிக் கோபுரம் என்று அழைக்கின்றார்கள்.

இத்தலத்தில் திருப்புகழ், கந்தர் அனுபூதி, திருவெம்பாவை, திருவம்மானை, அருணாச்சல அஷ்டகம் நூல்கள் இயற்றப்பட்டுள்ளன.

- சைவ எல்லப்ப நாவலர் எழுதிய அருணாசல புராணம், அருணைக் கலம்பகம்

- குருநமச்சிவாயர் எழுதிய அண்ணாமலை வெண்பா


தேவாரம், திருவாசகம், பதினொராந்திருமுறை, பெரியபுராணம், கந்தபுராணம், திருப்புகழ், சோனசைலமாலை, திருவருணைக் கலம்பகம், அருணாசல புராணம், அருணாசல மகாத்மிய வசனம், அருணகிரி அந்தாதி, அண்ணாமலை வெண்பா, திருவருணை அந்தாதி, அண்ணாமலை சகதம், சாரப்பிரபந்தம், கார்த்திகை தீப வெண்பா, சோணாசல வெண்பா, சோணாசல சதகம், திருவருணைக் கலிவெண்பா, திருவருட்பதிகம், அருணாசலேசுவரர் பதிகம் - 1, அருணாசலேசுவரர் பதிகம் - 2, உண்ணாமுலையம்மன் சதகம், அருணாசலேசர் நவகாரிகை மாலை, உண்ணாமுலையம்மன் வருகைப்பதிகம், அருணாசல சதகம், அருணாசல அட்சரமாலை, அண்ணாமலையார் வண்ணம், திருவண்ணாமலைப் பதிகங்கள், அண்ணாமலைப் பஞ்ச ரத்னம், திருவருணைத் தனி வெண்பா, அட்சரப் பாமாலை, அருணாச்சலேசுவரர் உயிர் வருக்கம் படைத்தற் பாமாலை, அருணசல அட்சரமாலை, அருணாசலநவ மணிமாலை, அருணாசல பதிகம், அருணாசல அஷ்டகம், அருணாசல பஞ்சபத்தனம் ஆகியவை இச்சிவாலயத்தின் புகழைப் பாடுகின்ற நூல்களாகும்.

- இத்தலம் பஞ்சபூத தலங்களில் அக்னித் தலமாகும்.
- நினைத்தாலே முக்தி தலமென சிவபுராணம் குறிப்படுகிறது.
- காமதகனம் நிகழ்வு இத்தலத்தில் மட்டுமே நடைபெறுகிறது.

■ ஆடிப்பூரத்தன்று மாலையில் உண்ணாமுலையம்மன் சந்நிதி முன் தீமிதி திருவிழா நடைபெறுகிறது. இவ்வாறு தீமிதி திருவிழா நடைபெறும் சிவாலயம் இதுவே.

■ அருணகிரி நாதருக்கு விழா எடுக்கப்படுகிறது.

இத்தலம் சித்தர்களின் சரணாலயமாகவும் விளங்குகிறது. பதினெட்டு சித்தர்களில் ஒருவரான இடைக்காட்டுச் சித்தர் இத்தலத்திற்கு உரியவராக விளங்குகிறார்.



அண்ணாமலை சுவாமிகள், அப்பைய தீட்சிதர், அம்மணி அம்மாள், அருணகிரிநாதர், அழகானந்த அடிகள், ஆதி சிவ பிரகாச சாமிகள், இசக்கி சாமியார், இடைக்காட்டுச் சித்தர், இரமண மகரிசி, இறை சுவாமிகள், ஈசான்ய ஞான தேசிகர், கண்ணாடி சாமியார், காவ்ய கண்ட கணபதி சாத்திரி, குகை நமச்சிவாயர், குரு நமச்சிவாயர், குருசாமி பண்டாரம், சடைச் சாமிகள், சடைச்சி அம்மாள், சற்குரு சுவாமிகள், சேசாத்திரி சாமிகள், சைவ எல்லாப்ப நாவலர், சோணாசலத் தேவர், ஞான தேசிகர், தட்சிணாமூர்த்தி சாமிகள், தம்பிரான் சுவாமிகள், தெய்வ சிகாமணி சித்தர், பத்ராச்சல சுவாமி, பழனி சுவாமிகள், பாணி பத்தர், மங்கையர்கரசியார், ராதாபாய் அம்மை, வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், விசிறி சாமியார், விருபாட்சி முனிவர், வீர வைராக்கிய மூர்த்தி சாமிகள் ஆகிய சித்தர்கள் அண்ணாமலையில் வாழ்ந்த சித்தர்களாவார்கள். இவர்களில் பலர் அண்ணாமலையிலேயே ஜீவசமாதி அடைந்துள்ளார்கள். சில சித்தர்களின் ஆசிரமம் திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் அமைந்துள்ளது.

தற்போதும் பல்வேறு சித்தர்கள் திருவண்ணாமலையில் வாழ்ந்து வருவதாக சைவர்கள் நம்புகிறார்கள்.

# திருவானைக்கா
## திருச்சி



✪ திருவானைக்கா என்ற பெரிய சிவன் கோவில் நகரம் திருச்சிக்கு அருகே அமைந்துள்ளது, இதனை. திருஆனைக்கா, திருவானைக் காவல், திருவானைக்கோவில் என்றும் அழைப்பர். காவேரி ஆற்றுக்கும் கொள்ளிடத்திற்கும் இடைப் பட்ட தீவுப்பகுதியில், திருவரங்கத் திற்கு அருகே அமைந்துள்ளது.

✪ திருவானைக்கா பஞ்சபூத ஸ்தலங்களில் அப்புஸ்தலம் - நீர்த் தலம் ஆகும். மூலஸ்தான லிங்கம் இருக்குமிடம் தரைமட்டத்திற்க்குக் கீழே இருப்பதால் எப்போதும் தண்ணீர் கசிவு இருந்துகொண்டே இருக்கும்.

✪ இங்கு இருக்கும் ஜம்புலிங்கம் அம்பிகையால் செய்யப்பட்டது. ஒரு முறை பூமிக்கு வந்த அம்பிகை சிவனை வழிபட சித்தம் கொண்டார். காவேரியில் சிறிது நீர் எடுத்து லிங்கம் வடித்தார். அம்பிகை கையில் நீர் லிங்கமாக மாறியது. அம்பிகை அந்த லிங்கத்தை வழிப் பட்டு ஆனந்தம் அடைந்தார். நீரால் செய்யப்பட்டதால் லிங்கம் ஜம்பு லிங்கம் என வழங்கப்படுகிறது.

✪ அப்பர், திருஞானசம்பந்தர், சுந்தரர், அருணகிரிநாதர், தாயுமானவர், ஐயடிகள் காடவர்கோன் ஆகியோரால் பாடல் பெற்றதால் இது பாடல் பெற்ற தலம் ஆகும்.

✪ திருவானைக்கா அன்னை

அகிலாண்டேஸ்வரியின் ஆட்சித்தலம் உச்சிக்கால பூஜையின் போது சிவாச்சாரியார் அன்னை அகிலாண்டேஸ்வரி போல பெண் வேட மிட்டு கிரீடம் அணிந்து கொண்டு மேள வாத்தியங்களோடு யானை முன்னே செல்ல சுவாமி சந்நிதிக்கு வந்து சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகளைச் செய்வது இத்தலத்தின் தனிச் சிறப்பாகும்.

✪ புராண காலத்தில் வெண் நாவல் மரங்கள் நிறைந்த காடாக இத்தலம் இருந்தது. அங்கே ஒரு வெண் நாவல் மரத்தடியில் ஒரு சிவலிங்கம் இருந்தது. சிவகணங்களில் இருவர் தாங்கள் பெற்ற சாபம் காரணமாக இக்காட்டில் ஒருவர் யானையாகவும், மற்றொரு வர் சிலந்தியாகவும் பிறந்தனர்.

சிவலிங்கம் கூரையில்லாமல் வெய்யில், மழையில் கிடந்தது. சிலந்தி சிவலிங்கத்தின் மேல் வலை பின்னி வெய்யில், மழை மற்றும் மரத்தின் சருகுகள் லிங்கத்தின் மேல் விழாமல் காத்தது. யானை காவிரியில் இருந்து தன் துதிக்கை மூலம் நீரும் பூவும் கொண்டு வந்து வழிபட்டது. யானை சிலந்தி பின்னிய வலையை அசிங் கமாகக்கருதி அதை அழித்துவிட்டுச் செல்லும். சிலந்தி மறுபடியும் வலைபின்னி தன் வழிபாட்டைத் தொடரும். தினந்தோறும் இது தொடர, யானையைத் தண்டிக்க எண்ணிய சிலந்தி யானையின் துதிக்கையுள் புக, யானையும், சிலந்தியும் போராட கடைசியில் இரண்டும் மடிந்தன.

இவைகளின் சிவபக்திக்கு மெச்சி, சிவபெருமான் யானையை சிவகணங்களுக்குத் தலைவனாக ஆக்கினார். சிலந்தி மறு பிறவி யில் கோச்செங்கட் சோழன் என்ற அரசனாகப் பிறந்தது. பூர்வ ஜென்ம வாசனையால் கோச்செங்கட் சோழன் யானை ஏற முடியாத படி குறுகலான படிகளைக் கொண்ட கட்டுமலைமீது சிவலிங்கம் ஸ்தாபித்து 70 கோவில்கள் கட்டினான். அவை யாவும் மாடக் கோவில் என்று அழைக்கப்படுகின்றன. கோச்செங்கட் சோழன் கட்டிய முதல் மாடக்கோவில் திருவானைக்கா ஜம்புகேஸ்வரர் ஆலயமாகும்.


✪ இத்தலத்தின் நான்காவது திருச்சுற்று மதிலை இறைவனே நேரில் ஒரு சித்தரைப் போல் வந்து மதில் சுவர் எழுப்பிய பணியாளர்களுக்கு திருநீறை கூலியாகக் கொடுத்ததாக தல வரலாறு கூறுகிறது. பணியாளர்களின் உழைப்புக்கேற்ப திருநீறு

தங்கமாக மாறியதாகவும் தலவரலாறு கூறுகிறது. இதனால் இம் மதிலை திருநீற்றான் மதில் என்று அழைக்கிறார்கள்.

✪ மற்றொரு சன்னிதியில் குபேர லிங்கம் உள்ளது. மிகப்பெரிய வடிவாகவும், பலமுக ருத்திராச்சம் தாங்கியும் உள்ளது. இந்த குபேர லிங்கத்தை குபேரன் வழிப்பட்டதால்தான் சிவன் அருள் பெற்று செல்வந்தன் ஆனான்.

✪ காணக்கிடைக்காத பல அரிய சிற்பங்கள் இத்தலத்தில் உள்ளன: மூன்று கால் முனிவர் சிலை.

ஏகநாதர் திருவுருவம் அன்னையின் சந்ததிக்கு வெளியே உள்ள தூணில் காணக் கிடைக்கிறது. ஏகநாதர் என்பது மும்மூர்த்திகளும் சமமானவர் என்றும், எல்லோரும் ஒருவரே என்ற தத்துவத்தை யும் விளக்குகிறது.



# காஞ்சிபுரம்

❖ காஞ்சிபுரம், தமிழகத்தில் பாலாற்றின் கரையில் அமைந்துள்ள இந்நகரம், காஞ்சிபுரம் மாவட்டத்தின் தலைநகரமாகும்.

❖ இது பஞ்சபூத தலங்களில் ஒன்றாகும்.

❖ திருக்கச்சியேகம்பம் எனப் பழைய சமய நூல்களில் குறிக்கப்படும் காஞ்சிபுரம் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகும்.

❖ இங்கு பல கோயில்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை: காமாட்சியம்மன் கோயில், ஏகாம்பரநாதர் கோயில், வரதராஜ பெருமாள் கோயில், கைலாசநாதர் கோயில்.

கர்நாடக இசையின் மும்மூர்த்திகளான தியாகராஜர், சியாமா சாஸ் திரிகள் மற்றும் முத்துசாமி தீட்சிதர் ஆகிய மூவராலும் பாடப்பெற்ற தலம் காஞ்சியாகும். தமிழ்த் தியாகராஜர் எனப்போற்றப்படும் பாப நாசம் சிவன் அவர்களும் இத்தலத்தைப் போற்றிப் பாடியுள்ளார்.

**காஞ்சிபுரத்தைப் பாடியோர்கள் நெருங்கிய தொடர்புடையவர்கள்:**

நாயன்மார்கள்:
அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், சாக்கிய நாயனார், திருக் குறிப்புத் தொண்ட நாயனார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

ஆழ்வார்கள்:
திருமங்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார், திருமழிசை ஆழ்வார், அருணகிரிநாதர், கச்சியப்ப சிவாசாரியார், இராமனுஜர்

❖ காஞ்சி நகரம் தென்னிந்தியாவின் மிகவும் பழமையான நகரங் களில் ஒன்றாகும். காஞ்சி நகரம் பற்றிய குறிப்பு சங்க இலக்கிய பாடல்களிலும் பரிபாடல், மணிமேகலைக் காப்பியத்திலும் உள்ளது.

❖ இப்பகுதி தொண்டை மண்டலம் என அழைக்கப்பட்டது.

❖ "நகரேஷ்" காஞ்சி" - "நகரங்களுள் காஞ்சி" என குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு பண்டைக்காலத்தில் புகழ் பெற்று விளங்கிய நகரம் காஞ்சி.

❖ சீன வரலாற்று ஆசிரியர் யுவான் சுவாங் இந்நகரத்திற்கு

பயணம் மேற்கொண்டார். அவரது குறிப்பின்படி காஞ்சி நகரம் 6 மைல் சுற்றளவிற்கு பரந்து விரிந்து இருந்தது எனவும், மக்கள் கல்வி, வீரத்தில் சிறந்து விளங்கியதாக குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் காஞ்சி நகரத்திற்கு கௌதம புத்தர் வருகை புரிந்தார் என்று கூறியுள்ளார்.

❖ காஞ்சிபுரம் நெசவுத்தொழிலுக்கு மிகவும் புகழ் பெற்றது. இங்கு தயாரிக்கப்படும் காஞ்சிப் பட்டுப் புடவைகள் மிகவும் பிரபலமானவை.

❖ தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா பிறந்த இடமெனும் சிறப்பைப் பெற்றது இந்நகரம்.

❖ இராபர்ட் கிளைவ், வரதராஜப் பெருமாள் கோயிலுக்கு ஆபரண நகைகள் பலவும் வழங்கி இருக்கிறார்.

நான்கு கால் தூணில் உள்ள மங்கைகள் எல்லோர் மனதையும் கவருகின்றார்கள். அவர்களின் கூந்தல் அலங்காரம் பிரம்மிக்க வைப்பதாக உள்ளது. அதிலும் ஒரு சிறு குழந்தையை ஏந்திக் கொண்டு இருக்கும் பெண் மிக தத்ரூபமாக செதுக்கப்பட்டுள்ளாள்.

❖ பல்வேறு சோழ மன்னர்கள் இக்கோயிலுக்கு பல கொடைகளை வழங்கியுள்ளனர். இதை இதுவரை இங்கு கிடைத்துள்ள 156 கல் வெட்டுகள் மூலம் அறியலாம்.




அப்பாவின் தெய்வமாகிய அப்பாவும் அம்மாவும்





சின்னையா - தெய்வானை தம்பதியினர்

அம்மாவின் தெய்வமாகிய ஐயாவும் அம்மாவும்





வீரகத்தி - செல்லாச்சி தம்பதியினர்

# துயரப்பகிர்வு










## மரண அறிவித்தல்

### சின்னையா சோமு (வர்த்தகர்)



யாழ். காரைநகரைப் பிறப்பிடமாகவும், வட்டக்கச்சி, நயினாதீவு, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சோமு நேற்று(04.10.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி செல்லாச்சி தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மீனாட்சி, சங்கரப்பிள்ளை, செல்லம்மா, சின்னம்மா மற்றும் வள்ளிப்பிள்ளை காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் அன்புச்சகோதரரும் குணசீலன் (Guna Best Pc), குணராஜா (கொழும்பு), சசிகலா (கொழும்பு), கமல்ராஜ் (கொழும்பு) ஆகியோரின் அன்புத்தந்தையும் தாரகா (கிராம அலுவலர் யாழ். பிரதேச செயலகம்), பவுசியா (கொழும்பு), கேதீஸ்வரன் (கமல், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் டர்வின்ஸ்ரீ, டருண்ராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் இல. 91, கட்சன் வீதி, வட்டக்கச்சி கிளிநொச்சியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டக்கச்சி மம்மில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 748 3840,
076 416 4171, 077 938 5584

தகவல் :
பிள்ளைகள், மருமக்கள்.

## மரண அறிவித்தல்



### சின்னையா சோமு (வர்த்தகர்)

யாழ்.காரைநகரை பிறப்பிடமாகவும் வட்டக்கச்சி, நயினாதீவு, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சோமு அவர்கள் நேற்று (04.10.2018) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-தெய்வானை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி-செல்லாச்சி ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மீனாட்சி, சங்கரப்பிள்ளை, செல்லம்மா, சின்னம்மா மற்றும் வள்ளிப்பிள்ளை, காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் குணசீலன்(GUNA Best PC), குணராஜா(கொழும்பு), சசிகலா(கொழும்பு), கமல்ராஜ்(கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தாரகா(கிராம அலுவலர், யாழ்.பிரதேச செயலகம்), பவுசியா(கொழும்பு), கேதீஸ்வரன்(கமல், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் டர்வின்ஸ்ரீ, டருண்ராஜ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(05.10.2018) வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணியளவில் இல-91 கட்சன் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டக்கச்சி மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : பிள்ளைகள், மருமக்கள்.**

தொலைபேசி - 0777483840, 0784164171, 0779385584

## நன்றியோடு நாங்கள்..!

எங்கள் தெய்வம் பூலோகத்தில் உடலெடுத்து நடமாடிய காலங்களில் அவரை தங்களது இதயத்தில் உறவாக ஏற்று அவரோடு பயணித்த அன்புள்ளங்கள் - சந்தோசங்களைக் கொண்டாடவும் - துயர்களைப்பகிரவும் இணைத்துவைத்த இதயங்கள் - அப்பாவின் வளர்ச்சிகளில் மகிழ்ச்சிகளில் உயர்ச்சிகளில் இதயோன்னோதமான பங்களிப்புச் செய்த சொந்தங்கள் உறவுகள் நட்புகள் - அம்மா அப்பா இருவரின் குழந்தைகளான எங்களையும் உறவுகளையும் அவர்களின் முகங்களுக்காக அவர்களைப் போலவே பாவித்து அன்பு காட்டிய அன்பு உருவங்கள் - சொந்தரீதியாக உன்னத உறவுரீதியாக தொழில்ரீதியாக கல்வி கலை கலாசார பயணிப்பு ரீதியாக நல்மன துடன் அன்போச்சிய நெஞ்சங்கள் - அப்பாவை மனதார வாழ்த்திய அன்புக் கரங்கள் நன்றிக்கு உரித்துடையவர்கள்.


அப்பா நோயுற்று படுத்திருந்த இறுதி மூன்று நாட்களும் துடித்து அலறிய உறவுகள் சிகிச்சைக்கு ஒத்துழைத்த உயர்ந்த வைத்தியர் கள் அப்பா பயணமானவுடன் நேரிலும் தொலைபேசி மூலமும் இணையம் மூலமும் துயர் விசாரித்த உறவுகள் பசியாற்றிய சொந்தங்கள் அப்பாவின் நிகழ்வுக்காக மலர்வளையம் வைத்தும் கண்ணீர் அஞ்சலி செலுத்திய சொந்தங்கள். அப்பாவின் ஊர்வலத்தில் அப்பாவைச் சுமந்த தோள்கள் பாதம்பட்ட நன்றி கலந்த கால்கள் எங்கள் கண்ணீரால் அபிஷேகம் செய்யப்படுகின்றன. இவ்வாறு ஒரு பிறப்பு அதன் முடிவு என எழுதிய இந்தப் பிரபஞ்சம் யாவுமே புனித மான நன்றிக்குரியன. அச்சில் வடித்த வடிவமைப்பாளர் நண்பர்கள் நன்றியில் இணைபவர்கள்.. புத்தகத்தில் சொல்லாத தவறவிட்ட அனைத்து உள்ளங்களும் நன்றிக்கு இணைந்தே உரித்துடைய வர்கள்...

இதயத்து நன்றிகளுடன்...

**சோமையா குடும்பத்தினர்**

**077 908 6737, 076 998 3284**

**077 938 5584, 077 748 3840**



வம்சாலமரம்
சின்னையா * + தெய்வானை *
வீரகத்தி * + செல்லாச்சி *
மீனாட்சி* + சின்னத்தம்பி*
செல்லம்மா* + வேலுப்பிள்ளை*
சங்கரப்பிள்ளை* + கண்மணி
சோமு*
சின்னம்மா* + கிருஸ்ணன்*
வள்ளிப்பிள்ளை + கிருஸ்ணன்*
சரஸ்வதி* + சபாரெத்தினம்
பரமேஸ்வரி*
சிவராசா + கமலாம்பிகை
ஜெகராசா + புஸ்பமலர்
மாங்களேஸ்வரி + பிறைசூடி
சரஸ்வதி*
சிங்கராசா + குணலெட்சுமி
தங்கராசா + சோதிமணி
கங்காதரன் + பரமேஸ்வரி
பிரபாகரன் + ஜொபித்தா
கமலேஸ்வரி + பாஸ்கரன்
குணசீலன் + தாரகா
குணராஜா + பவுசியா
டர்வின்ஸ்ரீ
சசிகலா + கேதீஸ்வரன்
டரூண்ராஜ்
கமல்ராஜ்
* அமரரைக் குறிக்கும்













## திருக்குறள் - Thirukkural

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை.

For those who've left what all men love no place is found,
When they with folded hands remain who-till the ground.

உழுபவர் கைமட்டும் வேலை செய்யாது மடங்கி விட்டால், எல்லாரும் விரும்பும் உணவையும், நாம் விட்டுவிட்டோம் என்று கூறும் துறவியரும்கூட அவரது அறத்தில் நிலைத்துநிற்க முடியாது.

If the farmer's hands are slackened, even the ascetic state will fail.

ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

The men of mighty power their hidden energies repress,
As fighting ram recoils to rush on foe with heavier stress.

ஏற்ற காலம் பார்த்து ஆற்றல் மிக்கவன் காத்திருப்பது சண்டையிடும் ஆட்டுக்கடா, தன் பகை மீது பாய்வதற்காகப் பின்வாங்குவது போன்றதாகும்.

The self-restraint of the energetic (while waiting for a suitable opportunity), is like the drawing back of a fighting-ram in order to butt.

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

Whose soul delights with hungry men to share his meal,
The hand of hunger's sickness sore shall never feel.

தான் பெற்ற உணவை பலரோடும் பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவனை பசி என்று கூறப்படும் தீயநோய் அணுகுதல் இல்லை.

The fiery disease of hunger shall never touch him who habitually distributes his food to others.